கலாநிலயம்

V 6 NO. 19 11 May 1933

JL
[illegible]211, N78 KN
N336.19.
189177

அப்பர்

அப்பரும் அறுபத்துநான்கு கலைகளும்—30. வியாகரணம்

[349-வது பக்கத் தொடர்ச்சி]

(IX) அப்பரும் சுட்டெழுத்தும்

II பவணந்திகூறும் இலக்கண விதி

பவணந்தியின் சூத்திரம் அ, இ, உ, என்னும் மூன்று எழுத்துக்களும் தனிவரின் சுட்டு என்றதால், கலந்தும் நீண்டும் வருமாயின் அவை சுட்டன்றென்பது ஏற்படுகின்றது.பின்வரும் காரணங்களால், பவணந்தி அவ்வாறு எண்ணுமற் கூறினுரென்பது திண்ணம். ஆதலால் தொல்காப்பியனுர் விதியை மாற்றும் சொற்ருெடரால் பவணந்தி சூத்திரம் வழுவாயிற் றென்பதற்கு ஐயுறவில்லை.

எகர வினுமுச் சுட்டின் முன்னர்
உயிரும் யகரமு மெய்தின் வவ்வும்
பிறவரி னவையுந் தூக்கிற் சுட்டு
நீளின் யகரமுந் தோன்றுத னெறியே

நன்னூல்—உயிரீற்றுப் புணரியல் 13.

என்னும் சூத்திரத்தில் சுட்டு நீளு மென்பதனைப் பவணந்தி சுட்டுகின்ருராயினும், எக் காலத்தில் சுட்டு நீளும், நீண்டால் அது சுட்டா அன்ரு என்பனவற்றையும், அவை தனியே வராவிடிற் சுட்டன்ரு என்பதையும் விளக்கவில்லை. மற்றும், சுட்டு எண்வகை விடையில் ஒன்றென்பதைப் பவணந்தி நன்னூல் பொதுவியலில் விளக்குகின்ருர்:—

சுட்டு மறைநே ரேவல் வினுதல்
உற்ற துரைத்தல் உறுவது கூறல்
இனமொழி யெனுமெண் ணிறையு ளிறுதி
நிலவிய வைந்துமப் பொருண்மையி னேர்ப

நன்னூல் - பொதுவியல் 35

மேற்கூறிய சுட்டு, அ, இ,.உ என்னும் இம்மூன்றும் தனிவந்த சுட்டல்ல ; "சுட்டுமுதல் பெயராகிய *ரகர, னகர முதலிய வீற்று சுட்டுப்பெயர்களாம். அவையாவன: அவன், இவர் முதலியன. இதன்றியும் சுட்டு, காரணக் கிளவியாயும் வரும்.

இதற்கு உதாரணம் - திருவதிகை வீரட்டானம், அடையாளத் திருத்தாண்டகம்.

மாலாகி மதமிக்க களிறு தன்னை
வதைசெய்து மற்றதனி னுரிவை கொண்டு
மேலாலுங் கீழாலுந் தோன்ரு வண்ணம்
வெம்புலால் கைகலக்க மெய்போர்த் தானே
கோலாலம் படவரைநட் டரவு சுற்றிக்
குரைபடலைத் திரையலறக் கடைந்து கொண்ட
ஆலால முண்டிருண்ட கண்டத் தானே
அவனுகி லதிகைவீ ரட்ட னுமே.

அடையாளத் திருத்தாண்டகம் 8.

எனவே ஒரு பெயர்ச்சொல் மாத்திரத்திற்குப் பயன்படுவது சுட்டென்னலாகாது. வினையையும், வாக்கியங்களையும் குறிப்பிடவும் சுட்டு பயன்படும்.இதைத் தொல்காப்பியனுர்,

"சுட்டு முதலாகிய காரணக் கிளவியுஞ்
சுட்டுப் பெயரியற்கையிற் செறியத் தோன்றும்'

கிளவியாக்கம் 40.

என விளக்குவது காண்க. இதற்குச் சேனுவரையர் உரை:—சுட்டு முதலாகிய காரணக் கிளவி உருபேற்று நின்ற சுட்டுமுதற் பெயரோ டொப்பதோரிடைச் சொல்லாகலின் 'சுட்டுப் பெயரியற்கையிற் செறியத் தோன்றும் என்ருர்."

உதாரணம்:—சாத்தன் கையெழுதுமாறு வல்லான், அதனுற் றந்தை யுவக்கும். இதைத் திருவையாறு (பண்—காந்தாரம்) திருப்பதிகத்தில் அப்பர் சிவபெருமான் திருப்பாதம்* கண்ட விதத்தில் சுட்டுவது காண்க.

சுட்டு எக்காலத்தில் நீளுமெனின், செய்யுளில் நீளும், வசனத்திள் நீள்வது சிறப்பன்று."ஆண்டு" என்பதை அங்கு என்னும் பொருள்படப் பவணந்தி நன்னூற் பெயரியல் சூத்திரம் 52-ல் பிரயோகிப்பது காண்க. ஆயினும் தொல்காப்பியனுர் கூறியவண்ணம் சுட்டு "நீடவருதல் செய்யுளு ளுரித்தே" எனக்காட்டிலர். (உ - ம்)

ஆயிருதிணையின் இசைக்குமன் சொல்லே" "ஆயிரு பாற்சொல்" என்னும் தொடர்மொழிகளைக் காண்க. இவ்வாறே இங்கு என்பது ஈங்கு என்று செய்யுளில் வரும்:—

ஈண்டா விரும்பிறவித் துறவா வாக்கை
யிதுநீங்க லாம்விதியுண் டென்று சொல்ல
வேண்டாவே நெஞ்சமே விளம்பக் கேள்நீ
விண்ணவர்தம் பெருமானுர் மண்ணி லென்னை
யாண்டானன் றருவரையாற் புரமூன் றெய்த
வம்மானை யரியயனுங் காணு வண்ணம்
நீண்டா னுறைதுறை நெய்த்தான மென்று
நினையுமா நினைந்தக்கா லுய்ய லாமே.

திருநெய்த்தானம் - திருத்தாண்டகம் 2.

ஈண்டு செஞ்சடை யாகத்து ளீசரோ
மூண்ட கார்முகி லின்முறிக் கண்டரோ
ஆண்டு கொண்டநீ ரேயருள் செய்திடும்
நீண்ட மாக்கத வின்வலி நீக்கியே.

திருமறைக்காடு - திருக்குறுந்தொகை 2.

ஆகையால் அ, இ, உ என்னும் இம்மூன்றும் தனிவரிற் சுட்டு என்று பவணந்தி கூறியது குன்றக் கூறலென்னும் குற்றமுடையதாய்க் காணப்படுகின்றதன்ருே? மற்றும் சுட்டுக்கு இனம் 'மற்று' என்னும் இடைச்சொல் என்ருர்.

---

* அளியினுர் குழலினுர்கள் அவர்களுக் கன்ப தாகிக்
களியினுர் பாட லோவாக் கடவூர்வீ ரட்ட மென்னுந்
தளியினுர் பாத நாளும் நினைவிலாத் தகவில் நெஞ்சம்
தெளிவிலேன் செய்வ தென்னே திருப்புக லூர னீரே

திருப்புகலூர் - திருநேரிசை 5.

*"மாதர்பிறைக்கண்ணியானைமலையாண்மகளொடும்பாடி
கண்டேனவர் திருப்பாதம் கண்டறியாதன கண்டேன்"

† ஈண்டு என்பது இங்கு என்னும் பொருளில் அப்பர் தேவாரத்தில் வருவது காண்க:—

ஈண்டா ரழலி லிருவருங் கைதொழ
நீண்டார் நெடுந்தடு மாற்ற நிலையஞ்ச
மாண்டார்த மென்பு மலர்கொன்றை மாலையும்
பூண்டார் புகலூர்ப் புரிசடை யாரே.

திருப்புகலூர் - பண், இந்தளம் 9.

மற்றுங் கேண்மின் மனப்பரிப் பொன்றின்றிச்
சுற்றும் பூசிய நீற்றொடு கோவணம்
ஒற்றை யேறுடை யானடி யேவலால்
பற்றொன் றில்லிகள் மேற்படை போகலே
காலபாசத் திருக்குறுந்தொகை 9.

என்பதில் "மற்றும்" முன்சொன்ன விஷயங்களைச் சுட்டி இவையன்றியுள்ளனவென்பது காட்டுவதாய்ப் பவணந்தி மற்றைச் சுட்டினம் என்றார். ஆயினும் அதைச் சுட்டிற்கு ஒருவகை எதிர்மறை யெனிற் பொருந்தும்,

"மற்றைய தென்னும் கிளவி தானே
சுட்டுநிலை யொழிய வினங்குறித் தன்றே"
(தொல் - சொல் 264).

என்பர் தொல்காப்பியனார். இதனைச் சுந்தரர் தேவாரம் கடவுகைத்திருப்பதிகம்,

"பண்மயத்த மொழிபரவை சங்கலிக்கும் எனக்கும்
பற்றாய பெருமானே மற்றாரை யுடையேன்"

என்பது விளக்கும். அப்பர் தேவாரத்திலும்

மற்றுநீர் மனம்வை யாதே
மறுமையைக் கழிக்க வேண்டில்
பெற்றதோ ருபாயந் தன்னால்
பிரானையே பிதற்று மின்கள்
கற்றவன் தரக்க னோடி
கயிலாய மலையெ டுக்கச்
செற்றுகந் தருளிச் செய்தார்
திருச்சோற்றுத் துறைய னாரே.
திருச்சோற்றுத் துறை-திருநேரிசை 10.

மற்றும், என்னும் சொல் மாத்திரமன்று. இன்னம் பின்னும் மேலும், முதலிய சொற்களும் சுட்டுக்கு எதிர்மறையைக் குறிக்கும்.

இன்னங் கேண்மி னிளம்பிறை சூடிய
மன்னன் பாதம் மனத்துட னேத்துவார்
மன்னு மஞ்செழுத் தாகிய மந்திரம்
தன்னி லொன்று வல்லாரையுஞ் சாரலே.
காலபாசத் திருக்குறுந்தொகை 10.

தமிழ்நாட்டு இராஜ இரத்தினங்கள்.

[345-வது பக்கத் தொடர்ச்சி]

தேவாதிபத்யம்

திருவிளையாடற் புராணத்தில் பழியஞ்சின படலத்தில் மற்றொரு சான்றுளது. ஒருபார்ப்பனன் தன் பத்தினியுடனும் புத்திரனுடனும் ஒரு ஊரிலிருந்து மற்றொரு ஊருக்குப் போய்க்கொண்டிருந்தான். அவ்வழியில் ஒரு காட்டைக் கடக்கவேண்டி யிருந்தது. அங்கே வெயிலின்கொடுமை தாளாமல் ஒரு மரத்தடியில் தங்கிச் சிறார்களுடன் சற்றே இளைப்பாறினான். களைப்பினால் கண்ணயர்ந்தாள் பார்ப்பனத்தி. சிறிது நேரம் பொறுத்து, தாகவிடாய் தீர்க்கத் தண்ணீர் கொண்டுவரப் போனான் அந்தணன்.

அச்சமயத்தில் அம்மரத்தின் கிளைகளுக்கிடையில் தொத்திக்கொண்டிருந்த ஒரு அம்பு காற்றினால் அசைக்கப்பட்டு அப்பார்ப்பனத்தியினது மார்பின்மீது விழுந்து பொத்துக்கொண்டு அவளது ஆவியைமாய்த்தது. வேதியன் திரும்பிவந்து பார்த்தபொழுது அவனுக்குற்ற துக்கத்திற்குக் கங்குகரை யுண்டோ? மண்டையி லடித்துக்கொண்டான். மண்மீது விழுந்தான். புலம்பினான். புரண்டான். அழுதான். அரற்றினான். அலறினான். கதறினான். பிறகு ஒருவாறு தேறினான். சுற்றுமுற்றும் பார்த்தான். தான் தங்கியிருந்த அதே விருக்ஷத்தின்கீழ் மற்றொரு புறத்தில் அப்பொழுதுதான் வெயிலுக் கொதுங்கவந்த ஒரு வேடனைக்கண்டு அவனே கொலையாளியென்று அனுமானித்து, "அடே கிராதகா, நிரபராதியான என் பத்தினியைக் கொன்ற படுபாவி !! உன்னை விடமாட்டேன். மஹா பாண்டியனுடைய ஸன்னிதானத்திற்கு வாடா" என்று பிடித் திழுத்துக்கொண்டு மனையாளின் உடலை முதுகில் தூக்கிக்கொண்டு, குழந்தையை இடுப்பில் எடுத்துக்கொண்டு அரசவை யணுகி, "ஹே தர்மஸ்வரூபி! இந்த அநியாயத்தைத் தாங்களே காண்பீராகவும்" என்று கீழேவிழுந்தான்.

"நமது ஒப்பற்ற குடைநிழலிலும் இப்படி ஸ்திரீஹத்தி நடக்கலாமோ ?" என்று மனம் உருகினான் பாண்டியன். வேடனுடைய வரலாறுகளை வினவினான். கிராதன், "மஹாப்பிரபோ, நான் வெயிலில் களைத்து அம்மரத்தின் குளிர்ந்தநிழலையடைந்தேன். நான் அம்மாதரசியைக் கொல்லவேயில்லை" என்று விம்மி விம்மியழுது விளம்பினான். நயத்தாலும் பயத்தாலும் கேட்டும்வேடுவன் "எனக்கொன்றுமே தெரியாது" என்பதொன்றையே உறுதியா யுரைத்தான். பாண்டியனோ அவனைக்கண்டித்தும் தண்டித்தும் பார்த்தான். திட்டியும் குட்டியும் பார்த்தான். அதட்டியும் அடித்தும் பார்த்தான். பேசியும் ஏசியும் பார்த்தான். ஆசை காட்டியும் காசைக்காட்டியும் பார்த்தான். ஐயோ பாவம்! வேடன் வதையுண்கின்றானே யொழிய உண்மை விளங்கினபாடில்லை. பிறகு நல்ல அமைச்சனை நோக்கினான். "இது மனிதப் பிரயத்தனத்தால் தெரியலாகாது. தெய்வந்தான் தெளிவிக்கவேண்டும்," என்றான் அமைச்சன். பாண்டியன் பார்ப்பானை நோக்கி "ஸ்வாமின், நானிதை நன்றாய் விசாரித்து நாளைஉமது கவலையை ஒழிப்பேன். போய் உமது பத்தினிக்குரிய கடன்களை முடித்துவிட்டு வருவீராக" என்று கட்டளையிட்டனுப்பிவிட்டு வேடனைச் சிறையிலிட்டான்.

அன்றிரவு சோமசுந்தரக்கடவுளது ஸந்நிதானத்தை யடைந்து, ஆலால அப்பனைத் தியானித்து" அண்ணலே! அருட்கடலே!! ஏழை பங்காளனே!!! பிராமண[illegible]தியைக்கொன்றவனைக் கண்டுபிடிக்க முடியாமல் கல[illegible]குகின்றேன். தேவரீர் ஸகாயத்தையே நாடுகின்றேன். அடியேனுடைய துலாக்கோலன்ன செங்கோலுக்[illegible] அருள்கூரும்" என்று பக்திபரவசனா யிறைஞ்சினான் அரசன்.

அப்போது ஆகாயத்திலிருந்து ஒரு அசரீரி வாக்[illegible] "இம்மதுரையம்பதிக்கு வெளியே ஒரு வீட்டில் [illegible] விவாகம் நடக்கிறது. அங்கே நீ அந்த வேதியனை [illegible] அழைத்துவந்தால் எல்லாம் தெளியும்படி செய்[illegible]றோம்" என்று அறிவித்தது. உடனே அரசன் த[illegible]தரண்மனைக்கேகி முதல்நாள் உத்தரவுப்படி அங்[illegible] வந்திருந்த அந்தணனை அழைத்துக்கொண்டு வே[illegible]

றாகு தரித்து விவாகவீட்டைத் தேடியடைந்து இருவரும் ஒருபுறம் உட்கார்ந்தனர். அங்கே அரூபிகளாய் வந்திருந்த யமபடர்களுள் நிகழ்ந்த சம்பாஷணை சுந்தரேசன் அருளால் இவர்கள் காதில் விழுந்தது.

அதாவது, ஒரு தூதன் மற்றொரு தூதனைப் பார்த்து, "என்ன அண்ணே! இவனுக்கோ மங்களகரமாய்க் கலியாணம் நடந்துகொண்டே யிருக்கின்றது. தென்னிசைக்கோனோ இன்னவ னுயிரை இக்கணமே கொண்டுவரும்படி ஆக்ஞாபித்திருக்கின்றான். இம்மணமகனோ எவ்விதமான வியாதியுமின்றித் திடகாத்திரசாலியாய் விளங்குகின்றான். எப்படி நாம் இவன் உயிரைக் கவர்வது?" என்று கேட்டான். அதைக் கேட்ட மற்றொருவன், "என்னடா நீ அதிசயமாய்ப் பேசுகின்றாய்? யாதொரு விதமான உபாதையுமின்றிக் களைதீரும்பொருட்டு மரத்தின் குளிர்ந்த நிழலில் தங்கியிருந்த பார்ப்பனத்தியின் ஆவியை எப்படிக் கவ்வினோம்? எக்காலத்திலோ, எவனாலோ, எக்காரணத்தினாலோ எய்யப்பட்ட அம்பை நாம் ஒரு வியாஜயமாகக் கொள்ளவில்லையா? அதுபோல் இவனுடைய உயிருக்கும் ஒரு உபாயந் தேடவேண்டும்" என்று எடுத்துக் கூறினான். 'ஓஹோ ஹோ! நீ சொன்னது வாஸ்தவம். அப்படியே ஒன்று செய்வோம், இங்கு நடைபெறும் மேளவாத்திய கோஷத்தைக் கேட்டு மருண்டு புறக்கடையிலிருக்கும் அந்தப் பசுவை இவன்மீது பாயச்செய்து இவன் உயிரைப் பிடிப்போம்" என்று யுக்திகூறினான் வேறொருதூதன். உடனே பாண்டிய பூபதி, "கேட்டீரோ நியாயத்தை விப்பிரரே! தெளிந்ததோ சந்தேகம்?" என்று வினவினான். விப்பிரன், "கேட்டேன் ஆயினும் இங்கே நடந்துள்ள சம்பாஷணைப்படி நிகழ்ந்தாலொழிய நான் நம்பமாட்டேன்" என்றான். இதற்குள் பற்பல வாத்திய கோஷங்களுக்குப் பயந்து கொல்லைப்புறத்தில் கட்டப்பட்டிருந்த ஒரு பெரிய பசுவானது கட்டியிருந்த கயிற்றை யறுத்துக்கொண்டு ஓடிவந்து மணமகனைத் தாறுமாறாய் முட்டித் தள்ளி மிதித்து அவனுயிரை மாய்த்துவிட்டு ஓடிற்று.

அந்தோ! பரிதாபம்!! பரிதாபம்!!! மணப்பறையே பிணப்பறையாய், மணமகனே பிணமகனாய், மங்கள காரியமே அமங்கள காரியமாய்க் கண்ணிமைப்பொழுதில் மாறிவிட்டது. இந்த அல்லோல கல்லோலத்தைக் கண்ட பிராமணன், யார் விதியை யாரறிவார்? என்னே காலத்தின்கோலம்? ஐயோ வீணாகவேடனது வேகனைக்குக் காரணமாய்ப் பெரும்பாவி யானேனே. சீச்சீ! என்னே என் ஆத்திரம்? கோபம்பாபமல்லவா?" என்று தன்னைத்தானே நொந்துகொண்டான். மனைவி மாண்டதன் உண்மை விதிவலியாலேயாம் என்பதை ஐயமறவறிந்தான். பிறகு அரசனும் அந்தணனும் அரண்மனைக்குச்சென்று வேடனைக் காராக்கிரகத்திலிருந்து விடுவித்தார்கள். தான் மன்னனேயாயினும் நீதிதவறியொருவனை வருத்தியதால் பாண்டியன் வேடனிடத்தில் க்ஷமை பெற்றான். பிராமணனும் வேடனுடைய பாதங்களைப் பிடித்துக்கொண்டு, "ஐயனே! எனது கோபத்தாலும், ஆத்திரத்தாலும் முன்பின் ஆலோசியாது உம்மீது படுபழி சுமத்தினேன். என் மூடச் செய்கைக்கு முற்றும் வருந்துகிறேன். அசடன் யான் செய்த அடாச்செயல்களெல்லாம் நிரபராதியான உம்மால் மறக்கக் கடவன. என்னையும் மன்னிக்கும்படி மன்றாடுகின்றேன்" என்று கெஞ்சினான். பரமதயாளுவான குலோத்துங்கக் கொடைவள்ளல் அவ்வேடனுக்கு ஏராளமான திரவியங்களைத் தந்து அனுப்பிவிட்டுப் பிராமணனுக்கும் புனர்விவாகம் செய்து வைத்தான். மனம்போன போக்காய்த் தீர்ப்புச்செய்யாமல் உண்மையை உணருவதற்காக என்ன பாடுபட்டான் பாருங்கள். இதுவல்லவோ மன்னர்க்கழகு?

கேரள ராஜ்யமென்று சொல்லப்படும் சேரராஜ்யத்தைச் செழிப்புற ஆண்டுவந்தவர்களும் சோழபாண்டிய பூபதிகளுக்கு எவ்விதத்திலும் பின்னிடைந்தவரல்லர். வீரம் மிக்க செங்குட்டுவனென்ன ? புலமை மிக்க இளங்கோவடிகளென்ன ? பக்தி விஞ்சின குலசேகரனென்ன? சேரமான்பெருமான்நாயனாரென்ன? இன்னவர்களின் இனிய சரிதம் படிக்கப் படிக்கத் தெவிட்டாத் தன்மையனவாம்.

உதாரணமாக, சேரமான் பெருமானது சரித்திரத்தைச் சிறிது ஆராய்வோம். அவர் கேரள கேசரி, சிறந்த பக்திமான். செங்கோலோச்சின செம்மை மனத்தான். செந்தமிழ்த் திலகன். குடிகளின் க்ஷேமத்தையே தன்னகத்திற்குடிவைத்தமன்னவன். நீதிதவறா நெறிமுறையோன். துஷ்டசிக்ஷகன். சிஷ்டபரிபாலன். இவ்வள்ளலின் தந்தையாவார் காலம்முடிந்து கைலாயம் புகுந்தார். சற்புத்திரனாகிய சேரமான் பிதாவின் பிரிவைப் பெரிதும் மனத்திடை கொண்டார். சிந்தை கலங்கினார். கலக்கங்கொண்ட காவலன் செவ்வனே ராஜ்ய பரிபாலனம் செய்ய முடியாதென்று கருதி, தம் அரசாட்சியை மந்திரியிடம் ஒப்புவித்துவிட்டு, தாம் தனியே இருக்க விரும்பினார். நன் மந்திரிகள் அதற்குச் சிறிதும் உடன்படவில்லை. நற்குடிகளும் தம் ஆருயிரன்ன அரசனை விட்டுப் பிரிந்திருக்கச் சம்மதிக்கவில்லை. ஆயினும் மந்திரிகளும் குடிகளும் எவ்வளவு வேண்டியும் அரசன் இணங்க மறுத்தனர். அரசைத் துறப்பதற்கே முடிவுசெய்துவிட்டார். கேரளக்கோனுக்குக் குலதெய்வமாகிய அநந்தபத்மநாபனின் அருளால், "உமக்குத்தெரியாத விஷயங்களை யெல்லாம் தெளிவாக உணர்த்துவோம். அரசை விடாதேயும்" என்றொரு அசரீரிவாக்கு ஆகாயத்தில்உண்டாயிற்று. அத் திருவாக்கின்படி சேரமான் முடியைத் தாங்க முனைந்துநின்றார்.

ஆகவே பண்டை மும்மன்னர்கள் ஆழ்ந்த பக்தியிலும் தெய்வ வழிபாட்டிலும் ஒருவரை யொருவர் விஞ்சி விளங்கினர்.

எமாங்கதத் திளவரசன்
ஸ்ரீமான் T. N. சேஷாசல ஐயர் B.A., B.L.,
எழுதியவோர்
செந்தமிழ்க்காதை.
கலாநிலயம், வேளாளர் வீதி, புரசைபாக்கம், சென்னை. விலை ரூ. 1—4—0

யாப்பிலக்கணம்

[354-வது பக்கத் தொடர்ச்சி]

செய்யுள்—கலிப்பா

முந்திய இதழில் பஃருழிசைக் கொச்சகக் கலிப்பா, மயங்கிசைக் கொச்சகக் கலிப்பாஎன்பவற்றைப் பற்றிக் கற்ரேம்; இவ்விதழில் வெண் கலிப்பா, கலி வெண்பா என்பவற்றைப் பற்றிக் கற்போம்:

9. வெண் கலிப்பா:—கலித்தளையும், வெண்டளையும், ஒவ்வோரிடத்துப் பிற தளையும் கொண்டு, அளவடி இரண்டும் ஓர் எதுகையால் வந்து ஒரு விகற்பமாய், பல தொடையாகவும், ஈற்றடி சிந்தடியாகி, நாள் மலர் காசு பிறப்பு என்னும் வாய்பாடுகளுள் ஒன்றை இறுதியிற் பெற்று வெண்பாவைப்போல முடிந்தனவாகவும் வருவன வெண்கலிப்பா எனப்படும்.

வெண் கலிப்பா

"சேன்ஞக நீர்பொழியச் செல்வரிலைக் கறமுமிகப்
பொன்ஞக நகர்புரையப் புவனமெலாம் புரந்தாண்டே
கருமேவும் வளைதவழுங் கமழ்வயற்பாய் பூந்தடஞ்சூழ்
மருமேவு நிழற்சோலை மயின்மேவிக் களித்தாடக்
கரும்பொப்பச் செஞ்சாலி காய்த்தலர்கைக் கடைசியரே
சுரும்பொப்பச் சூழிரப்போர் துதித்துவப்ப வியர்தீர்து
மாலைதாழ் குழலசைய மணக்குரவை யொலித்தாட
ஆலைதாழ் புனலொழுகி யலர்வனமுங் கனிபொழிலும்
மல்கிவளர் சிறப்போங்க வரையாச்சீர் மனம்வெறுப்ப
நல்கிவள ரீத்தலரன் ஞடு."

(இச்செய்யுள் ஐந்தொடையோடு, கலித்தளை வெண்டளை என்னும் இரு தளையும் விரவி, ஈற்றடி சிந்தடியாகவும் ஏனைய அடிகள் அளவடியாகவும் அமைந்து, வெண்பாவைப்போலக் காசு என்னும் குற்றியலுகர வாய்பாட்டால் முடிந்தமையறிக.)

10. கலி வெண்பா:—வெண்டளை பொருந்தி, வெள்ளோசை தழுவி, நேரிசை வெண்பாப்போல நாற்சீர் முச்சீர் தனிச்சொல் என அமைந்து, பல தொடை ஒன்றித் தொடர்ந்தும், தனிச்சொல் பெருது பல தொடை பெற்றும், ஈற்றடி சிந்தடியாய், நாள் மலர் காசு பிறப்பு என்னும் வாய்பாடுகளுள் ஒன்றைப் பெற்று முடிவது கலி வெண்பா எனப்படும். இக்கலி வெண்பா, பன்னீரடியின் மிக்கே வருமெனக் கொள்க. உலா, மடல் முதலிய பிரபந்தங்கள் இச்செய்யுளாற் பாடப்படும்.

(a) கலி வெண்பா

தீயோர் உரைகேளான் தீயோர் வழிசெல்லான்
தீயோர் முறையோதான்செல்வோனே—தூயமறைச்
சொல்லொன்றே தேடகத்தான் சோரா திராப்பகலச்
சொல்லொன்றே சூழுணர்வான் சொல்வோனே-ஒல்
[லெனப்பாய்
நீர்முகத்துப் பொய்யா நிறைகனிகொய் கொம்பொப்
[பான்
கார்முகத்துப் பாசிலையுங் காய்ந்திரா—சீர்முகத்து
மாசில்லோர்க் கெல்லா மயக்கமற வாழ்வாமே
ஆசுள்ளோர்க் கப்படியோ அல்லவல்ல—ஏசுபெறக்
காமமுதற் பற்றுதலாற் கால்சுழற்றுந் தூசியெனு
நாமமுத லற்றழிவார் நச்சறிவார்—வீமமிகத்
தீர்வையிடு நாளிற் சிதைந்தேங்கி நல்லவருட்
சோர்வையுறத் தாம்பிரிந்து சூழ்ந்துளைவார்-போர்
[வையில
தூயோர் நெறியறிவான் சூழாளு வான்கெடுக்குந்
தீயோர் நெறியறிவான் சேர்ந்து.

(இது நேரிசைவெண்பாவைப்போலத் தனிச்சொல் பெற்றுப் பலதொடையாய் வந்த கலிவெண்பா.)

(b) கலி வெண்பா

சுடர்த்தொடீஇ கேளாய் தெருவிஞ மாடு
மணற்சிற்றில் காலிற் சிதையா வடைச்சிய
கோதை பரிந்து வரிப்பந்து கொண்டோடி
நோதக்க செய்யுஞ் சிறுபட்டி மேலோர்நா
ளன்னையும் யானு மிருந்தேமா வில்லிரே
யுண்ணுநீர் வேட்டே னெனவந்தாற் கன்னை
யடர்பொற் சிரகத்தால் வாக்கிச் சுடரிழா
யுண்ணுநீ ரூட்டிவா வென்ரு ளெனயானுந்
தன்னை யறியாது சென்றேன்மற் றென்னை
வளைமுன்கை பற்றி நலியத் தெருமந்திட்
டன்ஞ யிவனொருவன்செய்ததுகா ணென்றேஞ
வன்னை யலறிப் படர்தரத் தன்னையா
னுண்ணுநீர் விக்கிஞ னென்றேஞ வன்னையுந்
தன்னைப் புறம்பழித்து நீவமற் றென்னைக்
கடைக்கண்ணுற் கொல்வான்போ னேக்கி
[நகைக்கூட்டஞ்
செய்தானக் கள்வன் மகன்.

(இது தனிச்சொல் பெருது, வெண்டளை பொருந்தி வெள்ளோசை தழுவி மலர் என்னும் வாய்பாட்டால் முடிந்தது.)

குறிப்பு:—பின்னுளில் வந்த புலவர் மற்ஞெரு வகைக் கலிப்பாவை விதித்துக் கட்டளைக் கலிப்பா என்னும் பெயரால் அதனை வழங்குவார் ஆயினர். அஃது இரட்டை யடியாய் நாலடி பெற்று, ஒவ்வொரு பாதியடியும் சீர் வகையால் தேமாவாயினும் புளிமாவாயினும் வந்து மூன்று கூவிளங் கூட்டி நாற்சீராகவும்; எழுத்து வகையால் ஒவ்வொரு பாதி யடியும் நேரசை முதலாயின் பதிஞேரெழுத்தாகவும், நிரையசை முதலாயின் பன்னிரெழுத்தாகவும் வரும் என அறிக. இச்செய்யுளிலும் எழுத்தெண்ணுங்கால் ஒற்ஞெழித் தெண்ணுதல் வேண்டும்.

கட்டளைக் கலிப்பா

இட்ட சீர்வகை யாஞெரு மாவின்கீழ்
இயைமுக் கூவிள மோரடிப் பாதியாய்
நெட்ட டிக்கெழுத் தெண்ணின தன்மையால்
நிரைபன் னீரெழுத் தாய்ப்பதி ஞென்றுநேர்
நட்டி ரட்டினஃ தோரடி யாகவிந்
நடைய நான்கடி யொப்ப நடந்தபாக்
கட்ட ளைக்கலிப் பாவென இன்றுநற்
கலைவல் லோருணர்ந் தோதின ரென்பவே.'

(இச்செய்யுளையே கட்டளைக் கலிப்பாவுக்கு இலக்கணமாகவும் உதாரணமாகவும் கொள்ளலாம்.)

தேவகி

[348-வது பக்கத் தொடர்ச்சி]

அத்தியாயம் 12.

துன்பமேயான இவ்வுலகத்தொடு என் துயரையும் தீர்த்துவிட எண்ணினளாய்க் குளத்திலே குதித்த நான் ஒரு நெடுவீட்டின் கூடத்தில் கண்விழித்தேன். என்னைச் சுற்றிச் சிலர் சூழ்ந்து நின்றனர். காலம் சிறிதேகண்ட பாதிநரைகொண்ட தாடியுடன் வயதுமுதிர்ந்த வொரு பெரியார் என் பக்கத்தில் அமர்ந்து என்னை யுற்றுநோக்கியவண்ணம் வீற்றிருந்தார். விழித்த வெனக்கு ஒன்றுமே விளங்கவில்லை. 'நான் காண்பது மண்ணுலகோ அல்லது விண்ணேதானே. என்னயல் இருப்பவர் மனிதரோ அல்லது வானுறை தேவரேயோ' என்று எண்ணினேன். நான் மருள மருள விழிக்கின்ற விழிநோக்கிய பெரியவர் என் மருட்சி கண்டு,"குழந்தாய், நீ இனிது என்மனை யிருக்கின்ருய்; அஞ்சாதே. உனக்கினி இடுக்கண்வராதபடி நான்காப்பேன்" என்று கூற, 'ஐயகோ, ஏனென்னை இங்குக் கொணர்ந்தீர்கள். பெண்பாலார்தாம் என் வாழ்க்கைக்குப் பகையாயினர். ஆண்பாலாரும் எனக்குத் தீங்காய் அமையவேண்டுமோ. கடவுளே, என்னையேனிப்படி வதைக்கின்ருய். என் துன்பம் தொலையலாகாதோ, இதுதான் உன் கருணையயில் முறையோ. நான் இம்மண்ணில் வந்ததும் வாழ்ந்ததும் பட்டதும் போதாவோ. என்னை விடுங்கள், நான் செல்கின்றேன்; நான் ஒருவருக்கும் தீங்கிழைத் தறியேன். என்னை யேன் இப்படி வதைக்கின்றீர். என் அன்னையும் ஐயனும் அழைக்கின்ருர். இதோ கை நீட்டுகின்றனர், நான் செல்கின்றேன். பெற்ரேர் தரும் அருமை எனக்கு வேண்டாவோ. விடுங்கள், செல்கின்றேன்" என்று நான் வாய்விட்டு அலறி எழுந்திருக்க முயன்றேன். அருகிருந்தபெரியார் என்னைத் தடுத்து, படுக்கையில் அமர்த்திஞர்.

நெடுநேரம் துயின்றபின் கண்விழித்த நான் ஓரறையில் கட்டிலின்மேல் சுத்தமான படுக்கையில் இருக்கக் கண்டேன். என் கட்டிலருகு அப்பெருந்தகையார் வீற்றிருந்தார். நான் கண் விழித்ததும், அவர், 'குழந்தாய்,உன் உடம்பு காய்கின்றது. வாய்திறவாமற் படுத்திரு' எனப் பணித்தார். அவர் குரலின் மென்மையும், அவர் நோக்கின் கருணையும், காட்டின அருமையும் என்னைக் கவர்ந்தன. என் தாயும் தந்தையும் என் பொருட்டு இவ்வுருக்கொடு மீண்டு வந்தனரோ என நினைத்தேன். இவ்வேளை வைத்தியர் வந்து என்னைப் பரிட்சைசெய்து மருந்துகொடுத்துச் சென்ருர். நாளுக்குநாள் என் உடல் குணமுற்றது. ஒருவாரம் கடந்ததும் நான் முற்றிலும் குணமடைந்தேன். அடிக்கடி என் தந்தையேயான பெரியார், 'அம்ம, தற்கொலை செய்துகொள்ளல் அறமன்று. அவ்வெண்ணத்தை அறவே ஒழித்துவிடு. நானிருக்கும்வரை உனக்கொரு தீங்கும் வாராமற் காப்பேன்" என்று கூறி என்னை மகிழ்வித்தார். நானும் என் குலதெய்வமென அவரைப் போற்றிவந்தேன்.

என்னை ஸ்வீகரித்துக்கொண்ட பெரியார் வாழ்ந்திருந்த நன்மனை, சூழ்ந்திருந்த பூந்தோட்டத்தால் அலங்கரிக்கப்பட்டிருந்தது. வாயிற்படி கடந்தவுடன் ஒரு பெரிய கூடமும் கூடத்தோடு இணைந்த இரண்டு பெரிய அறைகளும் இரண்டாவது கட்டும் சமையற்சாலையும், பசுக்கூடமும் பெரிய கிணறும் உடையது அவ்வீடு. அவ்வீட்டில் இரண்டு வேலையாளரும், ஒரு சமையற்காரியும் இருந்தனர். எனவே இவருக்கு மனைவி மக்கள் இல்லையென்று தெரிந்தது. துறவியும் இப்பெருமகனுக்கு இணையாவரோ என்றனர் அவ்வூரார். அப்பெரியாருக்கு நாற்பத்தைந்து அல்லது ஐம்பது வயதிருக்கலாம். நீண்டகன்றிருந்த அவர்தேகத்தில்,முளைத்தவெண்மதியெனத் திகழ்ந்த அவர்பரந்தமுகத்தில் துன்பக்குறியொன்று களங்கம் போல்எப்பொழுதும் தோன்றி இருந்தது.அவர்யாருடனும்பேசுவதில்லை.எப்பொழுதும் தரையை நோக்கியவண்ணம் நடப்பார்.தனிமையையே நாடிஞர். மாலை முழுதும் பசுக்கொட்டாரத்தில் அவ் வாயில்லாச் சீவனுடன் பழகுவார். அவர் தனிமையாக இருக்கையில் அவர் கண்கள் கலுழ்வதை நான் பலமுறை கண்டுளேன். அவரது வாழ்க்கைமுறையை நோக்குங்கால் முன் இழந்த வொன்றை மீண்டும்பெறுவோமோ என்ற ஏக்கம் கொண்டிருந்தனர் என்பது புலஞயிற்று. என்னிடம் அவர் பேசும் வேளையிற்ருன் அவர் திருமுகம் மலர்ந்திருக்கும். அவரது தோற்றமும் அவர் என்பாற் காட்டும் அன்பும் மென்மையும் என்னை அவருக்கு அடிமையாக்கின. அவர் முன்னிலையில் தாயினைக்கண்ட குழவிபோல் தளிர்த்தேன். இன்னபடி யவர் அருளியஅருமையுடன் அவ்வில்லத்தில் இனிதிருந்தேன். இரண்டுவாரங்களும் அகன்றன. அன்னவரை உழக்கும் ஒன்றை நான் அறிய விழைந்தேன். எனினும் அவரையணுகிக் கேட்கவோ துணியவில்லை. நான் தனியிருக்கும்வேளைகளில் அவர் துயரத்தைத் தீர்த்துவைக்குமாறு, ஐவர்கொடிக்குத் தாலி தந்து காத்தாளித்த பெருந்தேவைப் பரவிவந்தேன்.

ஒருநாள் மாலை மாட்டுப்பொங்கல் விமரிசையாய் நடந்தது. வேலையாளர் எருதாட்டம் பார்க்கச் சென்றனர். சமயற்காரியும் வெளியே சென்றிருந்தாள். அவ்வேளை சிற்றுண்டி செய்துகொண்டு அவரறை சென்றேன். நான் கொண்டுவந்த உண்டியை எனக்களித்து அவரும் உண்டார். உண்டபின், என்னைப் பற்றி யுசாவிஞர். "தாயும் தந்தையும் இளமையிலேயே இறக்க உறவினர்ஒருவர் வீட்டில் வளர்ந்து வந்தேன். அவரும் உயிர்துறக்க இந்நிலை யுறலானேன்" என்று நான் சொல்லவும் அவர் என்னை மேலொன்றும் கேட்கவில்லை. அவர் கண் கலங்குவதை நான் கண்டேன். சட்டென்று எழுந்து அவர் அகன்ருர். அன்று முழுதும் அவர் என் பக்கல் வரவில்லை. நானும் அச்சத்தால் அவரிருக்குமிடம் செல்லவில்லை. மறுபகலும் அவர் என்னுழை வரவில்லை. பொழுது போகாதிருக்கவே, அவ்வீட்டில் இருந்த தம்பூரை எடுத்து மீட்டி என்னையும் மறந்து பாடலானேன்.

தோய்ந்தும் பொருளனைத்துந் தோயாது நின்ற
சுடரே தொடக்கறுத்தோர் சுற்றமே பற்றி
நீந்த வரிய நெடுங்கருணைக் கெல்லா
நிலயமே வேத நெறிமுறையி னேடி

ஆய்ந்த வுணர்வி னுணர்வே பகையா
லலைப்புண் டடியே மடிபோற்ற வந்நாள்
ஈந்த வரமுதவ வெய்தினையே யெந்தா
யிருநிலத் தவோநின் னிணையடித் தாமரைதாம்.

மேவா தவரில்லை மேவினரு மில்லை
வெளியோ டிருளில்லை மேல்கீழு மில்லை
மூவாமை யில்லை மூத்தமையு மில்லை
முதலிடையோ டறில்லை முன்னொடு பின்னில்லை
தேவாவிங் கிவ்வோ நீசென்ற நிலையென்றூற்
சிலையேந்தி வந்தெம்மைச் சேவடிக ணேவக்
காவா தொழியிற் பழிபெரிதோ வன்றேற் [டோ
கருங்கடலிற் கண்வளராய் கைம்மாறு முண்

நாழி நவைதீ ருலகெலா மாக
நளினத்து நீதந்த நான்முகனார் தாமே
ஊழி பலவு நின்றளந்தா லொன்று
முலவாப் பெருங்குணத்த வுத்தமனே மேனாள்
தாழி தரையாகத் தண்டயிர் நீராகத்
தடவரையே மத்தாகத் தாமரைக்கை நோவ
ஆழி கடைந்தமுத மெங்களுக்கே யீந்தாய்
அவுணர்கடா நின்னடிமை யல்லாமை யுண்டோ

ஒன்றாகி மூலத் தருவம் பலவாகி
உணர்வு முயிரும் பிறிதாகி ஊழி
சென்று சறுங்கா லத்தந்நிலை யதாகித்
திறத்துலகந் தானாகிச் செஞ்செவே நின்ற
நன்றாய ஞானத் தனிக்கொழுந்தே நங்க
ணவைதீர்க்கு நாயகமே நல்வினையே நோக்கி
நின்றாரைக் காத்தி யயற்பேரைக் காய்தி
நிலையில்லாத் தீவினையு நீதந்த தன்றே.

வல்லவரம் பில்லாத மாயவினை தன்னான்
மயங்கினரோ டெய்திமதி மயங்கி மேனா
ளல்லை யிறைவனீ யாதியெனப் பேதுற்
றலமருவே முன்னையறப் பயனுண் டாக
வெல்லை வலயங்க ணின்னுழையென் றந்நா
ளெரியோனைத் தீண்டி யெழுவரென நின்ற
தொல்லை முதன்முனிவர் சூளுற்ற போதே
தொகைநின் றவையந் துடைத்திலையோ வெந்தாய்

சொல்லொன் றுரைத்தி பொருளாதி தூய
மறையுந் துறந்து திரிவாய்
வில்லொன் றெடுத்தி சரமொன் றெடுத்தி
மிளிர்சங்க மங்கை யுடையாய்
கொல்லென் றுரைத்தி கொலையுண்டு நிற்றி
கொடியாயுன் மாயை யறியேன்
அல்லென்று நிற்றி பகலாதி யாரிவ்
வதிரேக மாயை யறிவார்

என்னறை வந்து நான் பாடுவதை என் தந்தையே யான அப்பெரியார் கேட்டுக்கொண்டிருப்பதைநானறியேன். என்பாட்டு முடியலாக, எந்தையார் என்னை வாரியெடுத்து அணைத்துக்கொண்டு, "உன் பாடற்கலையும், நீ பாடிய பாக்களின் பொருளும் என்னை யுருக்கின. உன்னைப் பெற்றவர் பெரும் நோன்பு நோற்றிருக்கவேண்டும். பெண்ணே, இன்றுமுதல் நீயும்ஒரு பெண்ணாவாய்!" என்று என்னை யவர் அருமையால் நிறைத்தார். பின், 'உன்பேர் என்ன' வென்றார். 'ரோகிணி' என்றேன். என்னருமகளே, 'உனக்கொரு சந்திரனைத் தேடித் தருகின்றேன்.உங்களுக்கொருஅப்பனாய், நீங்கள் அடையும் மகிழ்ச்சியில் நான் மகிழ்ந்து வாழ்கின்றேன்" என்றவர் மெய்ம்மறந்து கூறினார். மானுடங் கடந்த அவர்தன்மையை விளக்கும் இப்பெருங் கருணைப் பேருரை என்னை உருக்கியது. கல்லும் இவ்வன்புரைக்கு உருகுமெனின் என் கன்னிமனம் கரைந்தது புதுமையன்று. உவகையும் அமைதியும் இரண்டறக்கலந்து என்னைப் புல்லியதுபோல் தோன்றினது. மனமற்ற பெருநிலையில் தழைத்தோங்கினேன். இவ்வன்பின்முன் உலகத்துப் புன்மையெல்லாம் பரிதிகண்ட பனியென்னப் பறந்தன. இம் மண்ணிலே விண்ணைக்கண்டேன். பொய்யினில்மெய்யைக் கண்டேன். பன்மையும் ஒருமையாக அவ்வொருமையும் நானேயாக நானுமே நாதமாக, எல்லாமும் எங்குமாய்ப் படர்ந்துவிட்டேன்.

இந்நிலையில் என்னப்பனே யான பெரியோன், 'குழந்தாய், ஏனோ மோனமாய் நிலைத்துவிட்டாய். இன்னொரு பாசுரம் பாடி என் மனம் களிக்கச்செய்வையோ' என்று கேட்க, 'எந்தாய், என் பாட்டு உங்களுக்குக் களிப்பைத் தருமாயின், எனக்குள ஜென்மமெலாம் பாட்டேயாய் மாறி நின்செவிகுளிரஒலித்துக்கொண்டிருப்பதைத் தவிர நான்வேறொன்றையும் இனி விழையேன்." என்று ஒரு பாசுரம் பாடினேன். பின் இருவரும் சிறிதுநேரம் பேசிக்கொண்டிருக்கையில், 'ஐய, உபாத்திமைத் தொழிலில் பழகியுள்ளேன். தனவந்தர் வீட்டுப் பெண்களுக்கு ஓதுவிக்கும் வேலையொன்று கிடைக்குமேல் என் வயிறு வளர்த்துவிடலாம். இவ்வழி தங்கள் உதவி கிடைக்கப் பெறுமேல்..." என்று நான் கூறுகையில் அப்பெருந்தகையார் இடைமறித்து "பெண்ணே, பரிகசமா செய்கின்றாய். உன் வயிற்றை நிறைத்துவைக்கப் போதியபொருள் என்வயின் உண்டு. எனது..."என்று கூறியவர் தம்முடைய திருமுகத்தை மறைத்தனராய்ச் சட்டென்று எழுந்து அகன்றுவிட்டார். எனக்கோ ஒன்றும் தோன்றவில்லை. சிறிதுநேரம் செய்வது தெரியாது திகைத்த நான், எழுந்து அப்பெரியார் அறை சென்றேன்; அங்கும் அவரில்லை. தோட்டத்திலுமில்லை. பசுக்கொட்டாரம் சென்றேன். வாயிலில் போய் நின்றேன். அவ்வேளை உள் நுழைந்த வேலையாளனைக் கேட்க, வெளியில் சென்றுளார் என்று கூறினன்.

அறிக்கை:—கலாநிலயத்தில் மதிப்புரை வரைவதற்குப் புத்தகம் அனுப்புவோர் ரூ. 10 கட்டணம் செலுத்த வேண்டும். அப்பொழுதே புத்தகத்தின் குணங்களையுங் குற்றங்களையும் ஆய்ந்து எழுதுவோம். இல்லையேல் புத்தகத்தின் வரவுமாத்திரம் குறிக்கப்படும்.

பொதிகை நிகண்டு

(இரண்டாம் பகுதி)

[332-வது பக்கத் தொடர்ச்சி]

சி

1005 சிகரந் தலையுந் திவலையுந் திரையும்
கவரி மாவு மலையி னுச்சியும்
சிகரமுங் காகமு மலையு மாகும்.
1006 சிக்கங் குடுமியுஞ் சீப்பு முச்சியும்
சிறையு முறியு [1]மெலிவுஞ் செப்பும்.
1007 சிகிசிலம்பு மயிலுங் கேதுவுந் தீயும்.
1008 சிகண்டி பாலை யாழி னோசையும்
மஞ்ஞையு மலியும் வழங்க லாகும்.
1009 சிகரி கோபுரமும் வெற்பு நாரையும்
சிறெலி யும்மெனச் செப்ப லாகும்.
1010 சிகழிகை மாலையு மயிர்முடியு மாகும்.
1011 சிங்கல் குன்றலுங் கெடலு யாகும்.
1012 சிதலை நோயுந் துணியுஞ் செல்லும்.
1013 சிதஞ்சய முறலும் வெள்ளையு ஞானமும்
திடனும் விண்மீனுஞ் செப்பலாகும்.
1014 சித்திரஞ் சித்திர கவியு மழகும்
கோளும் நடனமுங் காடும் பொய்யும்
வியப்புங் [2]கானு மோவியமு மாகும்.
1015 சித்தந் திடமுஞ் சித்தமுமாகும்.
1016 சித்திர பானுவோ ராண்டும் பானுவும்
தீயு மெனவே செப்ப லாகும்.
1017 சித்திர னோவனுந் தச்சனு மழகனும்.
1018 சிதர்அறு பதமுந் துணியும் திவலையும்
உறியு மெனவே யுரைக்க லாகும்.
1019 சிதடி சிச்சிலியுஞ் சிள்வீடு மாகும்.
1020 சிதடனந் தகனு மூடனு மாகும்.
1021 சித்து ஞானமும் செயமு மாகும்.
1022 சிந்தூரம் புளியுஞ் சிவப்புந் திலதமும்
செங்குடையும் யானையும் வனப்புஞ் சிந்தூரமும்
வெட்சியு மெனவே விளம்ப லாகும்.
1023 சிந்து வாரம் நொச்சியுங் கடலும்.
1024 சிந்து முச்சீரு நதியுங் குறளும்
கடலு நீருந் தேசமு மாகும்.
1025 சிமிலிசிள் வீடு முறியுங் குடுமியுஞ்
சிறிய வீயுஞ் செப்புவர் புலவர்.
1026 சிமையமலை யுச்சியுந் தென்றலும் வெற்பும்
குடுமியு மெனவே கூற லாகும்.
1027 சிரம் நெடுங்காலமு முறியுஞ் சென்னியும்.
1028 சிரை வானரமு நரம்பு மாகும்.
1029 சிரகங் கரகமுஞ் சென்னியிற் கோடும்
திவலையு மெனவே செப்ப லாகும்.
1030 சிலையோர் மரமு மலையும் வில்லும்
கல்லு மெனவே கழற லாகும்.
1031 சில்லை தூர்த்தையுஞ் சிள்வீடும் பகன்றையும்.
1032 சில்லிசிள் வீடுங் கீரையும் வட்டமு
தேருரு ளும்மெனச் செப்ப லாகும்.
1033 சிலம்பு மலையு மொலியுஞ் சிலம்புமாம்.
1034 சிலீமுக முலைக்கண்ணு மம்பு மாகும்.
1035 சில்லிகை நல்லாடை சிள்வண்டு மாகும்.
1036 சிலத ராரிவருளுஞ் சேடரு மாகும்.
1037 சிவமே நன்மையு முத்தியுங் குறணியும்.
1038 சிவப்புச் சினமுஞ் சினக்குறிப்புஞ் சிவப்பும்.
1039 சிவை கொல்ல னுலையு மரவேரு மோரியும
பார்ப்பதி யுமெனப் பகர லாகும்.
1040 சிறைநீர்க் கறையுங் காவலும் பக்கமும்
சிறகும் வேறிடமும் மதிலுஞ் செப்பும்.
1041 சிறுமை நோயுந் துயரமுந் துன்பமும்.
1042 சிறுமூலகன் காமனுந் திப்பிலியும்
பூடு மெனவே புகல லாகும்.
1043 சினைமரக் கோடு முட்டையுங் கருவும்
உறுப்பு மெனவே யுரைக்க லாகும்.

சீ

1044 சீகரங் கவரி மாவுந் திவலையும்
மழையுங் கரகமுஞ் செங்கையு மாகும்.
1045 சீதை யுழவு சாலுந் திருவும்
பொன்னுங் காணியும் புகல லாகும்.
1046 சீத்தைகீழ் மக்களும் [3]பதனழிவு யாகும்.
1047 சீதங் குளிரு மேகமு நீரும்
பனியு மெனவே பகர லாகும்.
1043 சீப்புதாழ்ப் பாளுஞ் சீப்புங் கஞ்சமும்
1049 சீர்சொல்லின் சீரும் செம்பொருளு மோசையும்
ஒல்கலுந் தண்டுஞ் செல்வமு மழகுஞ்
சீர்த்தியும் காதணுடுஞ் சிறப்பும் பாரமும்
தாளவொத்தும் பலவகை யியங்கலும்.
1050 சீரு ளாக்கமுஞ் செம்பு மீயமும்.
1051 சீலந் தண்டித்தலு ஞானமும் குணமும்
தருபமு மொழுக்கமுஞ் சாற்ற லாகும்.
1052 சீவன் வியாழமு முயிரு மாகும்.
1053 சீவினியோர் மருந்துஞ் செவ்வழி யாழும்
உயிரு நீரு முரைக்க லாகும்.

சு

1054 [4]சுகஞ்சுக் கிரீபனன்பையுங் கிளியுஞ்
சுநகனு மின்பமுஞ் சொல்ல லாகும்.
1055 சுக்கை தாரகையு மாலையு மாகும்.
1056 சுங்கஞ் சிற்பமு மிறையு மாகும்
1057 சுசி[யே] கோடையஞ் சுத்தமுந் தீயும்.
1058 சுடர்முச் சுடரும் பொறியும் விளக்கும்
ஒளியுந் தளிரு முரைக்க லாகும்.
1059 சுட்டி நாவும் பட்டமும் சுட்டியும்
மயிர்முடி யுமென வழங்க லாகும்.
1060 சுட்டல் காட்டலும் பற்றலு மாகும்.
1061 சுடுமண் பாண்டமு மிட்டிகையு மாகும்.
1062 சுடிகை யுச்சியு[5] மகுடமுஞ் சுட்டியும்
மயிர்முடி யுமென வழங்க லாகும்.
1063 சுடர்க்கடை யென்பது மின்மினியு மயிலும்.
1064 சுண்டன் மூஞ்சூறுஞ் சதையமு மாகும்.
1065 சுண்டையோர் செடியுங் கள்ளு மாகும்.
1066 சுதை சுண்ணச் சாந்தும் வெண்மையு மமுதும்
உதைகாற் பசுவும் புதல்வியு முடுவும்
நீறு மெனவே நிகழ்த்த லாகும்.
1067 சுந்தரி மூஞ்சூறு மிந்திரன் றேவியும்
தூர்க்கையு மம்பிகையுஞ் சொல்ல லாகும்.
1068 சும்மை நெற்போரு நாடு நகரும்
ஒலியுஞ் சுமையு முரைக்க லாகும்.
1069 சுரைபசு முலையு மம்புத் தலையும்
துளையுஞ் சுரையுங் கள்ளும் பசுவும்.
1070 சுருங்கை நுழைவாயிலுங் கரந்தகற் படையும்.
1071 சுரம்பாலை நிலமும்[6]தொனியும் வழியும்
காடுஞ் சுரமு மருநெறியு மாகும்.

(பிரதி)—1. மெலியுஞ். 2. கானு.

(பிரதி.)—3. தாளின் பெயரும். 4. சுகமுலைக்கண்ணும். 5. க்குடமும். 6. தோணியும்.

1072 சுரர்குரு வென்பது வியாழமும் போகியும்.
1073 சுரிகை யுடைவாளுங் கவசமு மாகும்.
1074 சுருதி வேதமு மொலியு மாகும்.
1075 சுரியலாண் மயிரும் பெண்பான் மயிரும்.
1076 சுரியே நரியுஞ் சுரியு மாகும்.
1077 சுரும்பு வண்டு மலையு மாகும்.
1078 சுவல்தோண் மேலும் மேடும் பிடரியும்
மாக்குசையு மயிருங் கோயிலு மாகும்.
1079 சுவாமி குமரனும் வியாழமு முனிவனும்
தலைவனு மாசானுஞ் சாற்ற லாகும்.
1080 சுவேதம் வெண்மையும் வேர்வையு மாகும்.
1081 சுன்னி [7]குங்குமமுந் துரும்பு மாரமும்.
1082 சு புள்ளின் மூக்குஞ் சுவர்க்கமுஞ் சுண்டனும்.

(பிரதி.)—7. ஞாழலு மாமரமு மாகும்.

தமிழ்ப் பாடம் 69.

நள வெண்பா—கலி நீங்கு காண்டம்

[344-வது பக்கத் தொடர்ச்சி]

புரோகிதனை நாடவிட்டுத் தன் நாயகன் இருந்தவிடந் தெரிந்துகொண்ட தமயந்தி தனக்கோர் இரண்டாம் சுயம்வரம் என்னும் சூழ்ச்சியால் அவனை வருவித்துப், பின் தன் மக்களைக்கொண்டு தேர்ந்துணர்ந்தவளாகித் தந்தையிடஞ் சென்று, "மடைத்தொழில் செய்கின்ற அவ்வாகுகன்காண் என் மன்னன்" என்றுரைக்க, வீமராஜன் அவனிடமுற்று வினவித் தெளிவதைஇனிவரும் நான்கு செய்யுள்களிற் காணலாம்.

போதலருங் கண்ணியான்போர்வேந்தர்சூழப்போய்க்
காதலிதன் காதலனைக் கண்ணுற்றான்—ஓதம்
வரிவளைகொண் டேறும் வளநாடன் றன்னைத்
தெரிவரிதா நின்றான் றிகைத்து. 68.

பதப்பிரிவு:—போது அலரும் கண்ணியான் போர் வேந்தர் சூழ போய் காதலிதன்காதலனைகண்உற்றான் ஓதம் வரி வளை கொண்டு ஏறும் வளம்நாடன்தன்னை தெரிவு அரிதா நின்றான் திகைத்து.

பதவுரை.

போது - அரும்புகள்
அலரும் - மலர்கின்ற
கண்ணியான் - மாலையை அணிந்த வீமன்,
போர் - போரில் சிறந்த
வேந்தர் -அரசர்கள்
சூழ - தன்னைச் சூழ்ந்து வர
போய் - சென்று
காதலிதன் - தனது அன்புள்ள புத்திரியின்
காதலனை - கணவனை
கண்ணுற்றான் - பார்த்தான். (பார்த்து)
ஓதம் - கடலானது
வரி - வரிகளமைந்த
வளை-சங்குகளை
கொண்டு - தாங்கி
ஏறும் - கரையில் ஏறுகின்ற
வளம் - வளப்பம் பொருந்திய
நாடன்தன்னை - நிடதநாட்டரசனுகிய நளனை
தெரிவு - தெரிந்துகொள்ளுதல்
அரிதா - முடியாமல்
திகைத்து - திகைப்புற்று
நின்றான் - நின்றான்

செவ்வாய் மொழிக்குஞ் செயலுக்குஞ் சிந்தைக்கும்
ஒவ்வாது கொண்ட வுருவென்னு—எவ்வாயும்
நோக்கினு னேக்கித் தெளிந்தா னுணங்கியதோர்
வாக்கினன் றன்னை மதித்து. 69.

பதப்பிரிவு:-செம்மை வாய் மொழிக்கும் செயலுக்கும் சிந்தைக்கும் ஒவ்வாது கொண்ட உரு என்னு எ வாயும் நோக்கினன் நோக்கி தெளிந்தான் நுணங்கியது ஓர் வாக்கினன் தன்னை மதித்து.

பதவுரை.

" வாய் - வாயிலிருந்து வருகின்ற
செம்மை - செவ்விய
மொழிக்கும் - இவனது மொழிகளுக்கும்,
செயலுக்கும் - செய்கைகளுக்கும்
சிந்தைக்கும் - எண்ணங்களுக்கும்
ஒவ்வாது - பொருந்தாமல்
கொண்ட - கொண்டிருக்கின்ற
உரு - உருவமாகும் இது"
என்னு - என்று யோசித்து (வீமராஜன்)
எ - எல்லா
வாயும் - வழியாலும்
நோக்கினன் - (உண்மை யாதென) கருதினன்.
நோக்கி - கருதி
நுணங்கியது - நுட்பமாகிய
ஓர் - ஒப்பற்ற
வாக்கினன்தன்னை - வாக்கையுடைய நளனை
மதித்து - ஆராய்ந்து
தெளிந்தான் - சந்தேகம் தீர்ந்தான்.

பைந்தலைய நாகப் பணமென்று பூகத்தின்
ஐந்தலையின் பாளைதனை யையுற்று—மந்தி
தெளியா திருக்குந் திருநாடா வுன்னை
ஒளியாது காட்டுன் னுரு. 70.

பதப்பிரிவு:—பசுமை தலைய நாகம் பணம் என்று பூகத்தின் ஐந்து தலையின் பாளைதனை ஐயுற்று மந்தி தெளியாது இருக்கும் திரு நாடா உன்னை ஒளியாது காட்டு உன் உரு.

அன்வயம்:—மந்தி,பூகத்தின் பைந்தலையின் பாளைதனை ஐந்தலைய நாகப்பணம் என்று ஐயுற்றுத் தெளியாது இருக்கும் திருநாடா, உன்னை ஒளியாது உன் உருக் காட்டு.

பதவுரை.

மந்தி - பெண்குரங்கானது,
பூகத்தின் - பாக்குமரத்தின்
பை - பசுமையாகிய
தலையின் - தலையிலுள்ள
பாளைதனை - பாளையை
ஐ - ஐந்து
தலைய - தலைகளையுடைய

நாகம் - பாம்பினது
பணம் - படம்
என்று - என்று
ஐயுற்று - சந்தேகங்கொண்டு [மல்
தெளியாது-(பாளையென்று) தெரிந்துகொள்ளா
இருக்கும் - இருக்கின்ற
திரு - அழகிய
நாடா - நாட்டை உடையவனே,
உன்னை - உன்னுடைய ரூபத்தை
ஒளியாது - மறைக்காமல்
உன் - உன்னுடைய
உரு - மெய் உருவத்தை [ஞன்)
காட்டு - காட்டக்கடவாய்" (என்றுவீமன் கூறி

விரிவுரை:—பைந்தலைய நாகம் என்றும், ஐந்தலைய பாளை என்றும், இச்செய்யுளில் சொற்கள் அமைந்திருந்தாலும் பொருள்செய்யும்போது, பைந்தலைய பாளை என்றும் ஐந்தலைய நாகம் என்றும், பை யென்னும் சொல்லையும் ஐ என்னும் சொல்லையும் அவை தொடர்ந்து நிற்கின்ற இடங்களிலிருந்து பிரித்து வேருகக் கூட்டி அன்வயப்படுத்திக்கொள்ளலாம். இப்படிச் சொற்களை அவை நிற்கும் இடத்தினின்று எடுத்துக்கொண்டு வேறு இடத்தில் சேர்த்துப் பொருள்செய்வதைக் கோண்டுகூட்டுப் பொருள்கோள் என்று சொல்வார். ஆற்றுநீர் மொழிமாற்று நிரனிறை விற்பூண் தாப்பிசை அளைமறிபாப்பு கொண்டுகூட்டு அடிமறிமாற்று, என்னும் எட்டு வகைப் பொருள்கோள்களில் இதுவொன்று.

குரங்கு, பாளையைக்கண்டு பாம்பென்று பயந்ததெனக் கூறுவது மயக்கவணி. இந்த அணிக்குத் திரிபதிசயவணி என்ற பெயருமுண்டு.

அரவரசன் றன்கொடுத்த வம்பூந் துகிலின்
ஒருதுகிலை வாங்கி யுடுத்தான்—ஒருதுகிலைப்
போர்த்தான் பொருகலியின் வஞ்சனையாற் பூண்ட
கோத்தாய முன்னிழந்த கோ. [ளிக்கும்

கருத்து:—அவ்வாறு விதர்ப்பன் கேட்கவும், கலியின் வஞ்சனையால் தன் அரசுஉரிமையை இழந்திருந்த நளன், கார்க்கோடகன் கொடுத்திருந்த வஸ்திரங்களில் ஒன்றை உடுத்து மற்றதைப் போர்த்துக் கொண்டான்.

இலக்கணம்

தொடரிலக்கணத்தில், தொகாநிலைத் தொடர்களாகிய, வினைமுற்றுத்தொடர், பெயரெச்சத்தொடர், வினையெச்சத்தொடர், எழுவாய்த்தொடர், விளித்தொடர், இரண்டுமுதல் ஏழுவரையிலுள்ள ஆறு வேற்றுமை உருபுகளும் விரிந்து நிற்கின்ற வேற்றுமைத் தொகாநிலைத் தொடர்கள், இடைத்தொடர், உரிச்சொல்தொடர், அடுக்குத்தொடர், என்னும் ஒன்பது வகைகளின் தன்மையையும் கூறினேம்.

தொகைநிலைத் தொடர்களில்வேற்றுமையுருபு மாத்திரமேனும்,வேற்றுமையுருபும் அதன் பயனைக்காட்டுவதற்கு அவசியமான சொல்லுஞ் சேர்ந்தேனும், இடையே தொக்கு நிற்கின்ற வேற்றுமைத் தொகைகளையும் பார்த்தோம்.

இனி வேற்றுமை உருபு அல்லாத மற்றவைகளும் மறைந்து இருத்தல்கூடும். அவ்விதமான (வேற்றுமையல்லாத) தொகைநிலைத் தொடர்கள் ஐந்து வகைகள் இருக்கின்றன. அவைதாம், வினைத்தொகை,பண்புத் தொகை, உவமத்தொகை, உம்மைத்தொகை, அன்மொழித் தொகை, என்பன. இவ்வைந்தையுங் கற்றுவிட்டால் தொடரிலக்கணம் முடிந்துவிடும். பின் புணரிலக்கணம் கற்கலாம்.

வினைத்தொகை:— தொகாநிலைத்தொடரில் பெயரெச்சத்தொடரை நினைவுபடுத்திக்கொள்ளுங்கள். விளைகின்றபயிர், கொல்லும்புலி,அழிகின்றபொருள், போன்ற தொடர்களில் நிலைமொழி பெயரெச்சமாயிருத்தலால் அவையெல்லாம் பெயரெச்சத்தொடர்கள். இவைகளையே, விளைபயிர், கொல்புலி, அழிபொருள் என்று கூறினுலும் அர்த்தம் வேறுபடாது. ஆனல் விளைகின்ற, கொல்லும், அழிகின்ற என்னும்போது அப்பெயரெச்சங்கள் என்ன காலத்தில் வந்திருக்கின்றன வென்பது வெளிப்படையாகத் தெரிகின்றது. விளைபயிர் என்றாலோ, முன் விளைந்த பயிர் என்று இறந்தகாலமா, அல்லது இப்பொழுது விளைகின்ற பயிர் என்று நிகழ்காலமா, அல்லதுஇனிமேல் விளையும் பயிர் என்று எதிர்காலமா, எனக் காலம் வெளிப்படையாகத் தெரிவதில்லை. இவ்விதம் நிலைமொழியானது காலங்காட்டமால் மறைந்து நிற்கும் பெயரெச்சமா யிருந்தால், அந்தத் தொகைநிலைத் தொடருக்கு வினைத்தொகை என்பது பெயர்.

தண் தார் புனை சந்திரன்சுவர்க்கி (கலிநீங். 49 என்ற அடியில் ' புனை சந்திரன்சுவர்க்கி ' என்னும் தொடரை எடுத்துக் கொண்டால், புனை என்னும் நிலைமொழி புனைந்திருக்கின்ற (அணிந்திருக்கின்ற) என்று இருக்க வேண்டிய பெயரெச்சத்தின் காலம் மறைந்த உருவத்தில் நிற்கின்றது. ஆகையால் அத்தொடர் வினைத்தொகை.

விரவு தாரான்:—(கலிநீங். 51) விரவுகின்றதாரான் என்று பெயரெச்சத் தொடராக விரியக்கூடிய இத்தொகை வினைத்தொகை.

அடுமடையா:— (கலிநீங்.62) அடுகின்ற (சமைக்கின்ற)என்று இருக்கவேண்டிய பெயரெச்சம் காலம் மறைந்து அடு என நிலைமொழியாய் நிற்பதால் இத்தொடரும் வினைத்தொகை.

உலவு கூந்தல்:—(கலிநீங். 66) இதுவும் வினைத்தொகையே.

பாய் இருள். விரி கதிர். செல் அடி. கொல் யானை. சூழ் நாடு—வினைத்தொகைகள்.

வாலி வதை

[356-வது பக்கத் தொடர்ச்சி]

கரன்வதைப் படலத்தில் முதனூலிற் கண்டபடி இராமன் முன்வைத்த காலைப் பின்வாங்கினன் என்று கொள்வது ஓர் மகாவீரனது வீரத்தன்மைக்குச் சால இழிவாம் என்றுகருதி, அவ் விருத்தாந்தத்தை அறவேமறந்து கரனைச் சம்ஹாரம் செய்வதான நோக்கத்துடன் முன் [illegible] கொடுத்திருந்த

189177.

தனுசைக் கைப்பற்ற இடதுகையைப் பின்புறம் நீட்டினன் இராமன் என்று கம்பர்சமர்த்திப்பர். இவ்வாறு பெருமாளைப் பகுமானித்துச் சொல்வதையே தம் கோட்பாடாகக் கொண்ட நம் கவியோ அவனுக்கு அவத்யம் வரும்படி எழுத ஒரு விதத்திலும் துணியார்.

ஆனல் "வாலிவதை", நான் முன்னரே காட்டியிருக்கின்றபடி சக்கரவர்த்தித் திருமகன் இங்குப்பிறந்துசெய்த "துஷ்டநிக்ரகத்தைச்" சேர்ந்தது என்பதில் சந்தேகமில்லை. எனினும், அவனை ஸம்ஹரித்ததற்குப் பெருமாள் காட்டிய காரணங்கள் மனுதர்ம சாஸ்திரங்களுக்குள் அடங்கி நிற்பனவல்ல வென்றும், அவைகளுக்குப்புறம்பாயும் அதீதமாயும் நிற்கும் "Divine Laws" களின்படியே பொருந்தும்என்றும் துணிவது உசிதமன்று. "ரூக்ஷம: பரமதுர்க்ஞேய: ஸதாம்ஏரம்: ப்லவங்கம" என்ற ஸ்ரீ வால்மீகிநாதன் வாக்கியம் "Divine Laws" என்ற கக்ஷியை ஒருவாறு வலியுறுத்தலாம்.

இக்கொள்கையைக் கம்பர் தனக்கு உடன்பாடாகக் கொள்ளவில்லை என்பது இவரது வாலிவதையை உய்த்துணர்வோர் எளிதில் தெளிந்துகொள்வர்.

இது நிற்க, மற்றைய ஆக்ஷேபணைகளைச் சற்று ஆராய்ச்சி செய்வாம். நேருமன்று மறைந்துநிராயுதன் மார்பி னெய்தது இராமனுக்குக் கௌரவமாகுமா? வீரத்தன்மைக்குப் பொருந்துமா? வஞ்சனையாகாதா? என்றுகேட்பர். இதற்குப் பெருமாள் வார்த்தையைக் கொண்டு முன் சமாதானம் கூறியிருந்ததை இப்பொழுதும் எடுத்துக்காட்டுகின்றேன்.

"நஞ்ச மன்ன வரைநலிந் தாலது
வஞ்ச மில்லை மனுவழக் காதலான்"

"Drastic Crimes deserve Drastic Punishment என்பது இராஜ்யதந்திரங்களில் ஒன்று; இதைப் பிரபுவும் கைப்பற்றினன். இது நிற்க இது சம்பந்தமாய் எனக்கு ஒரு மகாவித்வான் எழுதியுள்ளதை இங்குக் குறிப்பிடுகிறேன். "வாலி ஆததாயியாதலால் அவனல் பார்க்கப்படாமல் இராமன் மறைந்தான் என்பர். அருச்சுனனும் ஆததாயிகளோடு எதிர்வதேபாபம் என்று ஸ்ரீகீதை முதலத்தியாயத்தில் கூறினன்.......மறைந்ததற்குக் காரணம் ஆததாயி என்பதாம் என்றும் எய்ததற்குக் காரணம் "எடுத்துப் பாரிடையெற்றுவா மென்பது தம்பியைக்கொல்லவே புக்கதென்றும் கொள்ளலாகும். என்ன நிகழ்வது என்று காண மறைந்திருக்கலாம். தான் வெளிவருவதற்கு முன்னே அவனைக் கொல்லாமைக்கு மறைந்தபடியே அம்பெய்துவிடலாம். ஒருயிரைக் கொல்வானைக் கொன்றல்லது தடுக்காத நிலையிற் கொன்றான் என்பதேயாம்"

இராவணனையும் ஆததாயி "Outlaw" கோஷ்டியில் சேர்த்து முதனள் உயுத்தத்திலே தனியாயகப்பட்ட சமயம் இராமன் ஏன் கொல்லக் கூடாது என்று ஆக்ஷேபிக்கப்படுகிறது. ஏற்கெனவே நான் காட்டியபடி இராமனுக்கு எடங்காத பல காரணங்களினல் இருவர்களுக்கும் "உயுத்தம்" ஏற்பட்டுவிட்டது. அவ்விதம் ஏற்பட்ட போரிலே போரிற்குரிய தர்மங்களை அநுஷ்டிக்கவேண்டிய பொறுப்பு "அறங்களூறு மேனிபடைத்த" இராமனுக்கு ஏற்பட்டது. வாலியுடன் இராமனுக்கும் போர் நிகழ்ந்ததெனின், இவன் நேருமன்று மறைந்து நிராயுதன் மார்பில் பாணம் ஏவியது நிச்சயமாக உயுத்தமுறையில் தோஷமாகும்என்றுசொல்லத் தட்டில்லை. இராவணனைத் தனியாயகப்பட்ட சமையம் இராமன் ஏன் கொல்லவில்லை என்று கேட்பது, உயுத்தகளத்தில் அந்தச் சம்பவம் நடந்தது என்பதை மறந்ததாகும். இது நிற்க "முன்பு நின்றம்பி வந்து சரண்புக" என்ற பாடல் இடைச்செருகலன்று என்றும் அந்தப்பாடலும் சரணாகதி தர்மத்திற்குப் பொருத்தமுடையதென்றும் "ஒருவன் செய்த சரணாகதி யழியும்வண்ணம் வேறொருவன் சரணம் புகுதல் பொருந்தாதென்பதும் விபீஷணசரணாகதியிற் றெளிந்ததேயாம்" என்றும் ஆக்ஷேபிக்கப்படுகிறது.

இராக்ஷஸப் பிறவியனை விபீஷணனை அங்கீகரித்தால் பெருமாள் திருமேனிக்கு இவனல் அபாயம் வரும் என்று இராமபக்தியால் கலங்கின மகாராஜா "இவன் கைப்புகற் பால னல்லன்" என்று விண்ணப்பஞ்செய்யவும் பெருமாளும் சேர்ப்பார் பாசுரம் கேட்குமத்தனை யொழியப் பிரிப்பார் பாசுரம் கேளாதொழிந்தனகை இறைவன் திருவுள்ளத்திற்படுமாறு சுக்ரீவனும் இளைய பெருமாளை முன்னிட்டுத் தானும் சரணம் புகுந்தாள் என்று ஸ்ரீவால்மீகத்திலே பார்க்கும் இந்தச் சரணாகதியும் அவ்விராவணன் தம்பி தன்னையும் இளைய பெருமாளையும் சம்ஹரித்தல் கூடுமென்று பெருமாள் திருவுள்ளத்திற்படும்படி குறிப்பிட்டதாக நிற்கிறது. இவ்வரலாறு கம்பர் எடுத்துக் காட்டவில்லை. ஸ்ரீவால்மீகிநாதனல் காட்டப்பட்ட இந்தச் "சுக்ரீவ இலக்குவ" சரணாகதியைக் கலக்கமடியாக வந்ததாகப் பிரபுவும் மதித்துத் தெளிவடியாக வந்த விபீஷண சரணாகதியிலும் தாழ்வுடையதாகத் திருவுள்ளம் பற்றி அதையும் அங்கீகரித்து அதற்குப்போக்குவீடாகப் "பிசாசான், தானவான், யக்ஷான்" என்ற பாசுரத்தை மிகவும் கம்பீரமாகப் போதித்த பூர்வாசாரியர்கள் நிர்வாகம் செய்வர்கள். இவ்விருத்தாந்தத்தை உட்கொண்டு மேலே காட்டிய ஆக்ஷேபணை பிறந்ததெனின், அதற்குச் சமாதானமாய் ஸ்ரீநிகமாந்த மகாதேசிகன் அருளிச்செய்ததை இதோ வரைகிறேன்.

"பின்னையும் மகாராஜர் பெருமாளுடைய பிரபந்ந பாரதந்தர்ய காஷ்டையிலே யிறே நாம் விண்ணப்பஞ் செய்த வார்த்தை திருவுள்ளத்திற் படாதேயிருக்கிறதென்று புத்திபண்ணி ஒரு பிரமத்திக்கு இரண்டு பிரபத்தியாகப் பண்ணுவோமென்று இளைய பெருமாளையுங் கூட்டிக்கொண்டு திருவடிகளிலே விழுந்து பெருமாள் திருவுள்ளத்திலே தரிசிக்கவேண்டுமென்று பார்த்து உம்மளபி லன்றிக்கே, உமக்குத் தோழனை என் விஷயத்திலும் பஹிச்சரண பிராணபூதரான இளையபெருமாள் விஷயத்திலும் இவன் பிரச்சன்னனய் நின்று நலியுங்கிடீர்: ஆகையால் இவன் "வத்யன்" என்று விண்ணப்பஞ்செய்ய, இதைக் கேட்டபின் பெருமாள் "சுக்ரீவஸ்துதத் பாக்கியம் ....புங்கவம்" என்கிறபடியே கலக்க மடியாக மகாராஜர் இளையபெருமாளையுங் கூட்டிக்கொண்டு பண்ணின சரணாகதியில் காட்டிலும் தெளிவடியாக வந்த விபீஷணன் சரணாகதியொன்றுமே பிரபலமென்று அறுதியிட்டு மகாராஜருடைய அச்சம் தீரவேணுமென்று பார்த்தருளி, "தோழனுரே, விபீஷணன்

துஷ்டனென்றும் அதுஷ்டனென்றும் பண்ணுகிற விசார மேதுக்காகப் பண்ணுகிறீர். தம்மளவிலாதல், உம்மளவிலாதல், தம்பியளவிலாதல், இவனெரு பாதகஞ் செய்கைக்குப் பிரசங்க மேன். நம்முடைய பூந்தோட்டத்தில் ஜாதிமாத்ர வானரங்களுக்கு இவனுமொரு குற்றஞ்செய்ய வல்லனே, நாம் நினைத்தபோது பிசாசங்கள், அசுரர்கள், யக்ஷர்கள், பிருதிவியிலுள்ள இராக்ஷஸர்கள் எல்லாரும் திரண்டு வந்தாலும் ஒரு அங்குள்ளிய அச்சத்திற்குப் பற்றுமோ............ என்று தம்முடைய சர்வ சக்தித்துவத்தை வெளியிட்டுப் பண்டு நாமுமக்குக் காட்டின ப்ரபாவத்தை வானர ராஜ்யத்தில் புக்கவாறே மறந்தீரோ, என்று மகாராஜருடைய அச்சத்தைக் கழிக்கிறார். பெரிய வாச்சான் பிள்ளை இது சம்பந்தமாய் அருளிச்செய்ததையே தழுவநிற்பது ஸ்ரீதேசிகன் வாக்கியமும் என்றதில் சந்தேகமில்லை. மேலே எடுத்துக் காட்டியதிலிருந்து விபீஷண சரணாகதிக்கு எதிர்த்தட்டாய் நேர்ந்த சுக்ரீவ இலக்ஷ்மண சரணாகதியையும் ஒப்புக்கொண்டு அதற்குப் போக்குவிட்டான் எம்பெருமாள் என்று ஏற்படுகிறதே யன்றி, அதனின்றும், தப்ப நினைத்தான் என்று ருஷியும் சொல்லவில்லை. முன் விபீஷணன் கொண்ட சரணாகதி தெளிவடியாக வந்ததென்று கணிசித்தானே யெனினும் இதைக் கலக்கமடியாக வந்ததென்று அங்கீகரியாமல் தள்ளவில்லை. ஒடி மறையவுமில்லை. எந்த நிலைமையிலும் இந்த விருத்தாந்தங் கொண்டு ஒருவன் செய்த சரணாகதி யழியும்வண்ணம் வேறொருவன் சரண்புகுதல் பொருந்தாதென்பது ஏற்படவில்லையே. இக்கக்ஷியைப்பாராட்டினல் ஒன்றிற்கொன்று முரண்படும்படியாய் இருவர் சரணாகதி செய்தார்கள் எனின், அதற்குப் போக்குவிடும் ஆற்றல் ஸர்வக்ஞனை ஸர்வசக்தனுக்கு இல்லை என்று துணியவேண்டி வருகிறது.

"யதிவா ராவணஸ்வயம்" என்ற இடத்தும் வேறொரு இலங்கையையோ, லோகாந்தரத்தையோ நிர்மாணம் செய்து இவனுக்கு ஸ்ரீ இராகவன் அநுக்கிரகித்தல் கூடுமென்றும், அல்லது திருவயோத்தியையே பட்டாபிஷேகம் செய்து வைப்பான் என்றும் அல்லது அடிமைத்திறத்தில் நின்ற விபீஷணாழ்வானைக் கொண்டு அவன் கும்பகர்ணனுக்கு அளிப்பதாகக் குறிப்பிட்டபடியே இவ்விலங்கையையே இராவணனுக்கும் அளித்திருத்தல் கூடுமென்று பெரியோர்கள்சமர்த்திக்கிறார்கள். வாலிதன்உயிரின்பேரில் அன்பு பூண்டு சரணம் புகுந்தால் சுக்ரீவனுக்கு வாக்குச் சொன்னபடி இவனைச் சம்ஹாரம் செய்யமுடியாதே என்று கலங்கினன் பிரபு என்றல்லவோ இப்பாடலின் பாவம் அமைந்து நிற்பது. வாலியே சரணம்புகுந்தால் அதற்குப் போக்குவிடுவதற்குப் பெருமாளுக்கு வழியே கிடையாது என்று ஏன் கொள்ளவேண்டும். மரணத்தைக் காட்டிலும் கொடுமையான அவமானத்திற்கு அவனை ஆளாக்கலாம். அல்லது பிரபு அங்கீகரித்ததின் காரணமாக வாலியும் துருவனைப்போலவே இராஜ்யபாரத்தில் உதாசீனனய் "தெவ்வரைப் போற் பணி செய்ய" என்ற கணக்கிலே பகவத் கைங்கர்யங்களிலே மூண்டு சுக்ரீவனுக்கொப்பந்தம் உற்ற துணையாகலாம். எந்த நிலைமையிலும் கலக்கமடியாக வந்த சரணாகதியென்று பெருமாள் போக்குவிட்டு அங்கீகரிப்பனேயன்றி மறைந்துநிற்கத் துணியான்.

ஸ்ரீ மஹாபாரதத்தில் உயுத்தமுறைக்கு மாறாக வஞ்சனையால் உபபாண்டவர்களைச் சம்ஹரித்ததற்காக மரணதண்டனைக் குரியனய் நிற்கவும் அத்தண்டனையை விதிக்காமல் அதற்குச் சமானமான அவமானம்செய்து அசுவத்தாமாவைக் கழியவிட்டதும், ருக்மணி சுயம்வரத்தில் ஸ்ரீ கண்ணபிரானுடன் யுத்தத்திலெதிர்ப்பட்ட ருக்மியையும் வதைசெய்யாது வதைக்கொப்பந்தமான சிக்ஷைசெய்து விட்டதையும் நாம் பார்க்கின்றோம். க்ஷீரஸாகரத்தில் தேவர்கள் செய்த சரணாகதி காரணமாக அவதரித்துப் பிதிர்வாக்கிய பரிபாலனத்தைவிட்டு நாடு துறந்து காடேகி நின்ற பெருமாளைப் பரதாழ்வான் சரணம்புகுந்து மறுபடியும் நாடுபுகுந்து முடிசூட்டிக்கொள்ளும்படி பிரார்த்திக் தவிடத்தும் அதற்குப் போக்குவீடாக "மரவடியைத் தம்பிக்கு வான்பணையம் வைத்துப்போந்தாம்" என்றல்லவோ பெருமாள் சரணாகதி தர்மத்தை அநுஷ்டித்துக் காட்டும் ஆச்சரியத்தைப் பெரியோர்கள் காட்டிச் சமர்த்திக்கிறார்கள். ஆகவே நான் ஏற்கெனவே கொண்டபடி சரணாகதி சாஸ்திர அநுஷ்டானத்திற்குமுற்றிலும் விரோதமானபாவத்துடனிற்கும் காரணம்பற்றி இப்பாடலை இடைச்செருகல் என்று துணிதல் சால்புடைத்து என்று முடிக்க.

நம்மாழ்வார் வைபவம்

திருவாய்மொழி

[353 வது பக்கத் தொடர்ச்சி]

5-ம் பத்து 1-ம் தசகம்

1-ம் பாசுரம்.

கையார்சக்கரத்தென்கருமாணிக்கமேயென்றென்று
பொய்யேகைமைசொல்லிப்புறமேபுறமேயாடி
மெய்யேபெற்றொழிந்தேன்விதிவாய்க்கின்றுகாப்பார்யார்
ஐயோகண்ணபிரானறையோவினிப்போனலே.

பதவுரை:—அன்று - முன்பு பகவான் விஷயத்தில் மனதை முழுவதும்செலுத்தி அவன்திறத்திலே பாடுவதுவே பொருளென்று கருதாத அந்நாளில், கையார் சக்கரத்து என் கரு மாணிக்கம் என்று - சக்கராயுதத்தைத் திருக்கையில் தரித்து விளங்கும் என் இந்திரநீலமணியே என்று பகவானை ஒருக்கணமும் பிரிந்திருக்கச் சம்மதியில்லாதவன்போலே, புறமே புறமே ஆடி - வெளியாகிய உலக வியாபாரங்களிலேயே காலத்தையும் மனத்தையும் செலுத்தினவனய்த்திரிந்து-அதாவது முழுவதும் உலக வியாபாரத்தில் பிரவணனு யிருந்து, மெய்யே - பகவானே தன்னுடைய நிஜ பக்தனுக நம்பிக்கை வைக்கும்படி பிராகிருத உலக வியாபாரத்தின் சங்கத்தை விட்டுப் பகவானே ரஸமான வஸ்துவென்றும் அவனது தொண்டே புருஷார்த்த மென்றும் இவ்வுணர்ச்சிகளை, பெற்று - அடைந்து, ஒழிந்தேன்-உலக இயற்கையை நான்விட்டேன், விதிவாய்க்கின்று - பூர்வ ஜென்மங்களில் செய்த புண்ணிய பரிபக்குவத்தால்நற்கதியடைய இருக்கையில், காப்பார் யார் - அப்படி ஏற்பட்ட பகவானதுகருணையைத் தடுக்கவல்லவர்யாரேனும் உளரோ?

பகவான் ஸர்வ சக்திவல்லவன் அல்லவோ அவனால் தடுக்கவொண்ணாதது முண்டோவென்பது கருத்து, ஐயோ இனிப் போனாலே - இதற்கப்பால் அவனது கிருபை நின்றுவிட்டால் என்னாவது என்றாலோ? இது அப்படி அன்று-பகவானது கிருபைசமுத்திரம் பொங்கி வெள்ளம் கோப்பதுபோல் மிகுந்த வெள்ளத்தைப் பகவானுங்கூடத் தடுத்தலரிது. அறையோ-சண்டையிலும் வாதத்திலும்ஜெயித்தவர் தோற்றவரிடத்தில் செய்யும் ஜெயகோஷசப்தம்-கண்ணபிரான்-ஸ்ரீ கிருஷ்ணபகவானாகிய ஔதாரியமுள்ள பிரபுவே என் விஷயத்தில் அவனின்றும் பெருகிய கருணையை நிறுத்த யத்தனிக்கட்டுமே! ஜெயம் என் பக்கமே தோல்வி யவனதே, என்று அறைகூறுகிறார்.

"Time and tide wait for no man" says the proverb, but Alwar would add "even for the All-powerful the tide of His Grace once started cannot be interrupted even by Him!" It is a bet as against the gracious Lord Sri Krishna, and I am sure I shall win" says Alwar.—

மற்றொரு விஷயமும் குறிக்க உள்ளது. மனிதருடையவிருப்புவெறுப்புக்கள் மனக்கிலேசம்,சம்சயம், உறுதி, மனமுடைதல், தேர்தல் இவ்விடயங்களைப் பற்றி, மனிதரது குணநிசயங்களை நன்றாய்ப் பயின்ற வரகவிகளும் தத்துவதரிசிகளுமே அறியத்தகுந்தவர். அவர்களில் நம்மாழ்வாரும் ஆங்கிலக் கவி ஷேக்ஸ்பியருமே முக்கியமாய் மனிதருடைய மனப்பகுதியை ஊன்றி ஆராய்ந்தறிந்தவர்-ஆழ்வார் தமக்குப்பகவான் விஷயத்தில் பக்தி ஆதியில் மந்தமாயிருந்ததெனினும் "கையார் சக்கரத்து என் கருமாணிக்கமேயென்று" தாம் ஒருவாறு பாராட்டிவந்ததால் படிப்படியாய் அந்தப் பக்தி வளர்ந்து உண்மையான பக்திஇரசத்துக்குத் தாழ்ச்சியில்லாமல் பகவானே நன்கு மதிக்கும்படி விசேஷமான பிரீதியாய் மிகுந்து பெருகியது என்கிறார். மனம் பலவாறு சஞ்சலப்பட்டாலும் இடையீடின்றி அதை ஒருவாறு தேற்றி நிலைநிறுத்தினால் அடுத்த தடவையில் மனக்கூச்சம் குறைந்து தேர்ச்சி வளர்ந்து முதல் கருத்துக்களில் மனத்திட்பம் உறுதி பெறும். நாளடைவில் ஐயம் திரிபு கலக்கமெல்லாம் நீங்கி ஒழிந்து மனச் சீர்திருத்தம் வேரூன்றித்தளிர்க்கும். இது போலவே வரகவி, "ஷேக்ஸ்பியர்" "ஹாம்லெட்" நாடகத்தில் ஹாம்லெட் என்பான் தன் தகப்பனாகிய டென்மார்க்குதேசத்தரசன் மரிக்கவே அவனது சிற்றப்பன் அந்த இராஜ்ஜியத்தை ஹாம்லெட் பள்ளியில் படிக்கும் பிள்ளையாயிருந்ததின் நிமித்தம் கவர்ந்துகொண்டு அவனுடைய தாயாகிய "Gertrude" என்பாளைத் தனக்குப் பட்டத்துராணியாகத் தமையன் மரித்த இரண்டுமாத காலத்துக்குள்ளே மணந்துகொண்டான். இதற்கு ஹாம்லெட்டின் தாய் இசைந்ததற்குக் காரணம் சிற்றப்பனுக்குப் பிறகு தன் பிள்ளையையே அரசனாக நியமிப்பதாகச் செய்த ஏற்பாடு என்று புலப்படலாம். ஆனாலும் மகன் அவளை விளித்து "தெய்வம் போன்ற என் தகப்பனோடு வாழ்ந்தும் என் சிறிய தந்தையைப் போன்றவோர் அற்பனை மணந்துகொள்ள இசைந்தது உனக்கு அவனிடத்துள்ள ஆசையால் ஏற்பட்டது என்று சொல்ல வல்லையோ; உன் வயதில் ஆசையும் நிறைக்கலாச்சுதே" என்று உருமிக்கண்டிக்க,பிள்ளையை உற்றுநோக்கி, அவள் "நான் ஏன் பிழைத்தேனென்று அதட்டி அவமரியாதையாய் உன் வாய்க்கு வந்தபடி தைரியமாய்ப் பேசுகிறாய்" என்றாள். ஆனாலும் அவன் கூறிய கடுஞ்சொற்களையும், உரைத்த புத்திமதிகளையும் ஒருவாறு அவனுக்குத் தகப்பனிறந்தவிஸனத்தால் புத்திதடுமாறி அவன் பேசிய பேச்சுக்களென்று நினைத்தாளானாலும், கடைசியில் தான் செய்த அகாரியத்தால் மனசுக்கு மனஸே ஸாக்ஷி என்ற நீதியால் "உன் சொற்கள் என் மனத்தகத்துக் கத்தி வெட்டுப்போல் பாய்ந்து அதில் தோய்ந்திருக்கும் மாசுகளைக் கழுவினாலும் கறை நீங்காத மாசுகளாகவே அவைதாம் என் கண்களுக்குப் புலப்படக் காண்கின்றேன். இனி இடித்தொன்றும் சொல்லாதே மகனே" என்று இரக்கின்றாள். இத்துணைக்கும் காரணம் ஹாம்லெட்டின் இறந்த தகப்பன் அவன் முன், மற்றக் காவல்காரரும் கூடிநிற்க அவர்கள் கண்களுக்கு மானிடரூபமாய் தோற்றிப் பிறகு இரகசியமாய் மகனைமாத்திரம் சமிக்ஞைசெய்தழைத்து "விடியற்காலத்தில் தனித்திருக்கையில் என்னை என் தம்பி தோட்டத்திலுறங்கும்போது என் காதுகளில் ஏதோ நஞ்சை வார்த்து என்னுருபிரைமாய்த்து என் ராஜ்ஜியத்தையும் என்மனைவியையும்கவர்ந்துகொண்டான். இதில் உன் தாய் குற்றவாளியல்லள்-புத்திக் குறைவாலும் தான் இராஜ பத்னியாய் இன்னும் சிலகாலம் விளங்கவேண்டுமென்ற ஆசையாலும் சதி செய்யப்பட்டான்-முழுச் சம்மதத்தில் இப்பழிக்கு வந்தவள் அல்லள். அவளுக்கு "Step between her and her fighting soul" தைரியஞ் சொல்லி அவளை நன்மைக்கு உய்க்கப்பார். என் முக்கிய விண்ணப்பம் என்னைக் கொலைசெய்தவனைத்தகர்த்துப்பழிக்குப்பழி வாங்கவேண்டு மென்பது" என்று தகப்பனது பிசாசரூபம் (ghost) சொல்லி முடித்தது. இதே ghost பின்னொரு முறையும் "ஹாம்லெட்" தன் தாயுடன் சம்பாஷிக்கும்போதும் அங்குத் தோன்றி அவள் கண்களிற் படாமல் நின்று அதன் வார்த்தையை அவள் கேட்காமலுள்ள வாய்ச்சொல்லால் செய்யவேண்டிய காரியத்தில் பிள்ளையை வற்புறுத்தியது. இச்சந்தர்ப்பமெல்லாம் மகனைத் தூண்ட அவன் தாயிடத்தில் "நான் உன் மனதைப் பிழிந்து உருக்குவேன் - நான் சொல்வதை உட்கொள்வாயானால்—எனினும் நல்ல புத்தி உணர்ச்சிகளைப் பாழும் உன் கொடிய வழக்கம் வெட்டையாக்கித் தகர்த்துவிட்டிருக்குமே— ஆனாலும் சொல்வதைக் கவனி - நீ உய்த்து ஆண்டவன் கிருபையை அடையவேண்டி யிருந்தால், நான் பைத்தியம்பிடித்துப் பேசுவதாக நினையாதே. உன் குற்றமும் குறையுமே என்னைப் பேசவைக்கிறது. ஈசனுக்கு உண்மையை மனதாரச்சொல்லிச் செய்த குற்றத்துக்குவருத்தப்படு,இனித்தீச்செயல்களுக்குழைத்து வாராதே. என் சிற்றப்பன் படுக்கைக்குச்செல்லாதே. உனக்கே நற்குணமில்லாமற்போனாலும் அந்நற்குணம் உனக்கு இருப்பதாகவே போற்று - வழக்கம் ஒரு கொடிய பிசாசு. அது மற்ற ஸ்மரணை எல்லாவற்றையும் பற்றறத் தின்றுவிடும் - தீய நடவடிக்கைக்காரரை ஆட்டிவைக்கும் வலிய சைத்தானாயினும் மற்றொரு விஷயத்தில் (அதாவது சீர்திருந்துவோருக்கு) நன்காயமைந்த இஷ்ட தெய்வம் போல் நல்லதோர் கஞ்சுகத்தைப் போர்த்திருடிக்க உதவிசெய்யும்-இன்றுஇராத்திரி வழக்கத்தை விட்டுவிடு. சிற்றப்பனோடு உல்லாசம் வேண்டா. இப்படி நிறுத்தினால் அடுத்தபடி சேர்ட்டத்தைப் மறுத்தலுக்கு உதவியாகும்-அதற்குஅடுத்த கூப்பாட்டை மறுத்தல் எவ்வளவும் எளிதாகும்" இது கூடுமோ எனச்சங்கைவேண்டா,வழக்கம் மனிதனின் இயற்கைக்கட்டளையைக்கூட மாற்றிவைக்கும்; உன்னகத்துப் படர்ந்திருக்கும், மனப்பேயை உள்ளடங்கவோ அல்லது ஆச்சரியமான வேகத்தோடு துரத்திவிடவோ செய்யும்" என்று சொல்லி முடித்த பின்னர், பின்னுமாற்றாதவனாய்ப்"புகழ்படாக் கந்தைமெத்தையில் துர்நாற்றத்தில் அமைந்துதேன் மொழி கேட்கவும் கொஞ்சவும் துணிவதும் பன்றியின் துர்நாற்றச் சேற்றைப் பூசிக்கொள்வதுபோ லல்லவோ" என்று முடித்தான்.

காற்று மழை

Shakespeare—"The Tempest"

அங்கம் 1. களம் 2.

[311-வது பக்கத் தொடர்ச்சி]

[கண்ணிற்குப் புலப்படாததாகி ஏரியல் பாடிக்கொண்டு வருகின்றது. பர்டினண்ட் அதனைத் தொடர்ந்து வருகின்றான்.]

ஏரியல் பாட்டு (1)

பொன்னின் மணலில் இதன்பாற் போந்து
பின்னே கைகள் பிடித்துக் கொண்மின்
பின்னே கைகள் பிடித்துக் கொண்டு
சென்னி வணங்கி முத்தஞ் செய்தே.

பொங்குந் திரைகள் அடங்கிப் போக
அங்கும் மிங்கும் மரிதின் மிதிமின்
அங்கும் மிங்கும் மரிதின் மிதிக்கத்
தங்கும் பல்லவி யினியீர் தருமின்.

கேளள் கேளள் [வௌஉ வௌஉ]
காவற் கூரன் [வௌவௌ] குரைக்கும்
கேள்கேள் நடனக் கோழி [கோக்கோக்
கோக்ர கோஓ கோக்]கூ வவ்வே.

பர்டினண்ட்:-இவ்விசை எவ்வயின் இருத்தல்கூடும்? காற்றிலோ மற்றித் தரையிலோ? இப்போதது ஒலிக்கவில்லை—திண்ணம், இத் தீவின் யாதோ வோர் தெய்வத்திற்குப் பணிகேட்பதாதல்வேண்டும்இது. வேந்தன் என் தந்தை உடைந்ததற்கு யானோர் கரைமீதமர்ந்து மீண்டுங் கலுழ்ந்திருந்தபோது இப் பாடல் தன் இன்னிசையினால் அலைகளின் வெஞ்சினத்தையும் என்றன் அருந்துயரையுந் தணிப்பதாகி உததிமீ தூர்ந்தென் னருகுவந்தது. அங்கிருந்து அதனைத் தொடர்ந்து வந்தேன்; இல்லை, என்னை யது இழுத்துக் கொணர்ந்ததென்னல் வேண்டும்.—மற்று, அது ஓய்ந்துவிட்டதே; இல்லை, மீண்டுந் துவக்குகின்றது.

ஏரியல் பாட்டு (2)

ஐந்தா ளாழ முழுதின் மன்னே
நின்றன் றந்தை கிடக்கின் றானே;
அவன்ற னென்பான் மன்னே
பவளஞ் செய்பட லான;
அன்னான் கண்ணா யிருந்தன வவையே
மன்னே தாளம்.

பர்டினண்ட் - நேப்ல்ஸிற்கு அரசனான அலான்ஸோவின் புதல்வன். ஏரியல் இப்பொழுது அவனை, ப்ராஸ்ப்பீரோவும் மிராண்டாவும் இருந்த இடத்திற்குக் கொணர்ந்து சேர்க்கின்றது.

(1) ஏரியல், மற்றைய ஆவிகளைக் கூவிப் பாடுவனவாக இப்பாடல்கள் அமைந்திருக்கின்றன.—இதன்உரை—

பொன்னின் - பொன்போன்ற, மணலில் - மணலில், இதன்பால் - இவ்விடத்திற்கு, போந்து - வந்து, பின்னே - பிறகு, கைகள் பிடித்துக்கொள்மின் - ஒன்றோடொன்று நீங்கள் உங்கள் கைகளைக் கோத்துக்கொள்ளுங்கள். பின்னே கைகள் பிடித்துக்கொண்டு - அவ்வாறு நீங்கள் கைகளைக் கோத்துக்கொண்ட பிறகு, சென்னி வணங்கி - எல்லாரும் தலைகுனிந்து வணங்கி, முத்தம் செய்து - ஒருவர்க்கொருவர் முத்தம் இட்டு—

[மணலின்மேல் வந்து கைகோத்துக் கூத்தாடுவதற்கு ஏரியல் மற்ற ஆவிகளை அழைக்கின்றது. கூத்தைத் துவக்குவதற்கு முன் தலைவணங்கி ஒருவர்க்கொருவர் முத்தங்கொடுத்துக்கொள்ளும் மேனாட்டு வழக்கம் இங்குக் குறிக்கப்பெற்றிருக்கின்றது]

பொங்கும் - ஆரவாரம் செய்கின்ற, திரைகள் - கடலின் அலைகள், அடங்கிப்போக - அடங்கிவிட, அங்கும் இங்கும் - இம்மணலின்மீது எல்லா இடங்களிலும், அரிதின் - நேர்மையாகவும் அழகாகவும், மிதிமின் - சதி மிதித்து நடனம் செய்யுங்கள். அங்கும் இங்கும் அரிதின் மிதிக்க - அவ்வாறு அங்கும் இங்கும் அழகாக நடனம் செய்ய, இனியீர் - எனது இனிய ஆவிகளே, தங்கும் பல்லவி தருமின் - அதற்குப் பொருந்திய பல்லவிகளைப் பாடி உதவுங்கள்.

[பொங்கும் திரைகள் அடங்கிப்போக, என்பது, அலைகளின் ஒலி அடங்கும்படி நாம் ஆடிப்பாடி ஆரவாரம் செய்வோம் என்றேனும் பொருள்படலாம், அல்லது, அலைகள் அடங்கி இருப்பதால் நாம் ஆடிப் பாடுவோம், என்றேனும் பொருள் படலாம். இந்தமயக்கம் முதல்நூலிலும் உளது. சதிமிதித்தல் - தாள அடைவிற்குஇணங்கக் கால்களை வைத்து நடனஞ்செய்தல். இனியீர் - என்பது ஏரியல் மற்ற ஆவி உருவங்களை அழைப்பது.

மணலிற் போந்து - கைகள் கோத்து - முத்தஞ்செய்து, - அடங்கிப்போக - மிதிமின் - மிதிக்க - பல்லவி தருமின், என்று முடித்துக்கொள்க.

கேளள் கேளள் - கேளுங்கள் கேளுங்கள், [வௌஉ வௌஉ - இப்பொழுது நாய்கள் பலகூடி வௌ வௌ எனக் குரைக்கின்ற அரவம் திரைக்குள் கேட்கின்றது. ஆகையால், இவை ஏரியலின் மொழிகள் அல்ல. உள்ளே நாய்கள் குரைக்கின்ற ஒலியே முதலடியின் பின் இரண்டு சீர்களாக இச்செய்யுளில் அமைந்திருக்கின்றது] காவல் கூரன் - காவல் நாய்கள், [வௌவௌ - இப்பொழுது மீண்டும் உள்ளே நாய்கள் குரைக்கின்ற ஒலிகேட்க, அதுவே இவ்வடியின் மூன்றாஞ்சீர் ஆயிற்று] குரைக்கும் - குரைக்கின்றன. இது ஏரியலின் சொல். கேள் கேள் - மீண்டும் கேளுங்கள் கேளுங்கள், நடனக்கோழி - நடனம்செய்வதுபோல் நடக்கின்ற சேவற்கோழியானது, [கொக் கொக் கொக்ர கோஓ கொ - இப்பொழுது இப்படிக் கோழி கூவுகின்ற குரல் திரைக்குள்ளிருந்து கேட்கின்றது. இதுவே, மூன்றாம் அடியின் நான்காம் சீரும், நான்காம் அடியின் முதலிரண்டு சீர்களும் மூன்றாஞ்சீரின் முதலசையும் ஆகின்றது] கூவவே - கூவுவதை. நடனக்கோழி கூவக் கேள் - என முடித்துக்கொள்க.

(2) ஏரியல், பர்டினண்டை நோக்கிக் கூறுவதாக இப்பாட்டு அமைந்திருக்கின்றது:—

சாம்பற் கேற்ற வவனின் யாதும்
மேம்படு புதிதின் கடன்மா ருமல்
இலதே மன்னே ;
கடிகை தோறு நீரர மகளிர்
அடிப்பார் மன்னே யவன்சா மணியை
[டிங்டாங்] கேள்கே ளிப்போ
திங்குங் கேட்பேன் டிங்டாங் மணியே.

பார்டினண்ட்:—முழுகிய என் தந்தையை நினைக்கின்றது இப்பாட்டு. மானுட காரியமோ இதுவன்று; இவ்வுலகினிற்குரிய ஒலியுமன்றிது: இப்பொழுது அதனை யான் எனக்கு மேலே கேட்கின்றேன்.

ப்ராஸ்ட்பீரோ:—நின் கண்ணின் குஞ்சத் திரையினைப் போக்கி, ஆண்டு யாது காண்கின்றனை சொல்?

மிராண்டா:—என்னவது? ஆவியா? ஆகா! எம்மருங்கும் அது எப்படிப் பார்க்கின்றது! ஐய, வீரவடிவம் அதற்கு வாய்த்திருக்கின்றது, நிச்சயம்-எனினும், ஓர் ஆவிதானே அது.

ப்ராஸ்ப்பீரோ:—இல்லை, பெண்ணே; அது உண்ணும், உறங்கும், நமக்குப் புலன்கள் எப்படி அப்படியே அதற்கும் உள, அப்படியே. நீ காணும் இச்செம்மல் கப்பற் சிதைவில் இருந்தனன்; எழிலின் பிளவையாம் துயராற் சிறிது அவன் கறையுருண்டிருக்கின்றானல்லது, வடிவின் நல்லனெனவே அவனை நீ அழைக்கலாம். தன்னுடன் வந்தவர்களை இழந்து, அவர்தமைத் தேடிக்காணத் திரிகின்றான். (4)

மிராண்டா:—திப்பியப் பொருளென அவனை யான் அழைத்தலே நேர். இத்துணை மாண்பது இம்பர் இயற்கையில் யானொன்றுங் கண்டதில்லையே. (5)

ப்ராஸ்ட்பீரோ:—(ஒரு புறமாய்) நன்று, என் ஆன்மா தூண்டும் வண்ணமே நடக்கின்றது-ஆவியே, அழகிய ஆவியே, இதற்காக இரண்டு தினங்களுக்குள் உன்னை விடுதலைசெய்வேன் நான். (6)

ஐந்து ஆள் ஆழம் முழுதின் நின் தந்தை கிடக்கின்றான்-உன்னுடைய தந்தை இக்கடலில் ஐந்துஆள் ஆழத்தின் கீழே முழுதும் முழுகிக் கிடக்கின்றான். அவன்தன் என்பால் பவளம் செய்படல் ஆன - அவனுடைய எலும்புகள் எல்லாம் இப்பொழுது பவளமாகச் செய்யப்பட்டுவிட்டன. அன்னான் கண்ணாய் இருந்த அவையே தரளம் - அவன் கண்களாக இருந்தவை இப்பொழுது முத்துக்கள் ஆகிவிட்டன. அவனின் - அவனிடத்தில், சாம்பற்கு - வாடுவதற்கு, ஏற்ற - ஏற்றதாயிருந்த, யாதும் - எவ்வுறுப்பும், மேம்படு - மிகவும் சிறப்பு வாய்ந்த, புதிதின் - புதியபுதிய பொருள்களாக, கடல்மாறுமல் - கடலின் சேர்க்கையால் மாறுமல், இலது-இல்லை. (எல்லாம் மாறிவிட்டன) நீர் அரமகளிர் - இக்கடலில் இருக்கும் தெய்வக்கன்னியர், கடிகைதோறும்-நாழிதோறும், அவன் சாமணியை அடிப்பர் - அவனுக்குச் சாவுமணி அடித்துக்கொண்டிருக்கின்றனர். [டிங்டாங் - இப்பொழுது திரைக்குள்ளிருந்து டிங்டாங் என்ற ஒலி கேட்கின்றது.] கேள் கேள் - கேள்கேள். இப்போது இங்கும் கேட்பேன் டிங்டாங் மணியே-இப்போது நான் அந்த டிங்டாங் என்னும் மணி ஓசையை இவ்விடத்திலும் கேட்கின்றேன். [மன், கழிவுப்பொருளில் வந்த இடைச்சொல்.]

கருத்து: — நின் தந்தை கடலில் முழுகி உடலம் அழிந்து, அவன் உறுப்புக்களெல்லாம், பவளமும் முத்தும் பல்வகை மணிகளுமாகி மாறியும்விட்டன. இனி அவன் உருவை நீ காணமாட்டாய்—என்று எரியல் குறும்பாகப் பாடுகின்றது.

(3) வருகின்ற பர்டினண்டை ப்ராஸ்ப்பீரோ மிராண்டாவிற்குக் காட்டிக்கேட்பது இது—குஞ்சத்திரையினைப் போக்கி - உன் கண்களுக்குக் குஞ்சம் கட்டிய திரை போன்று இருக்கின்ற இமைகளைத் திறந்து - என்பது பொருள்.

(4) செம்மல் - மேன்மகன். எழிலின் பிளவையாம் துயர் - அழகை அரித்து அரித்து அழிக்கும் பிளவை நோய்போன்ற துயரம். துயரத்தால் இப்பொழுது இவன் அழகு சிறிது கெட்டிருக்கின்றது, இல்லையேல் இவன் நல்ல வடிவழகன் - என்பது பொருள்.

(5) திப்பியப் பொருள் - தெய்வலோகத்திற்குரியவொன்று. இம்பர் இயற்கை - இம்மண்ணுலகத் தன்மை. மாண்பது - பெருமை வாய்ந்தது.

(6) பர்டினண்டைக்கண்டு இவ்வண்ணம் மிராண்டா வியப்பது நோக்கி, தன் எண்ணம் இனி நிறைவேறும் என மகிழ்கின்றான். இது எரியலை நோக்கிச் சொன்னது.

கலாநிலயச் சொல்லூடாட்டம் 14.

விடையும்—முடிவும்.

நேரான விடை :—

இடம்—வலம் ,—1. சிந்து; 4. சாந்தி; 6. மாரி; 7. வருத்தம்; 9. சித்திரை; 11. துருபதன்; 13. தாரு; 14. குனி; 15. வளை; 16. மன்மதன்; 18. மீன்; 20 களிறுகள்; 22. தண்; 23. துகள்; 25. வான்; 26. சுண்ட; 27. குன்றுதோறாடல்; 29. தும்புரு; 31. தணி; 32. விடியல்; 33. தம்பி.

மேல்—கீழ் :—1. சிரித்தான்; 2. துவரை; 3. மைத்துனி; 4. சாம்பவன்; 5. திறன் அல்லது திடன்; 6. மாசி; 8. தரு; 10. திருமகள், 12. தளை; 14. குன்றுவான்; 16. மருது; 17. தனி; 18. மீள்; 19. கொண்டல்; 21. கன்றுதல்; 22. தண்டகம்; 24. கரம்; 26. சுரு; 27. குருடி; 28. தோணி; 29. துதி; 30 புவி.

நேரியவிடை அனுப்பியவர் :—M. கங்கேசு, யாழ்ப்பாணம்; A. பூபாலன், யாழ்ப்பாணம்; S. O. Rm. இராமசுவாமி செட்டியார், கண்டவராயன்பட்டி. C. M. நமசிவாயம், கோம்பை; K. வேலுப்பிள்ளை, பேராதனை; சந்தானகோபால ஐயர், கண்டாச்சிபுரம்; P. K. இராமலிங்கம் செட்டியார், பண்ணுருட்டி; A. முருகேச நாயகர், சென்னை; S. பட்டம்மாள், சென்னை; S. கந்தப்பிள்ளை, கண்டி; S. முருகேசு, கண்டி; R. திருமலை ஜக்கையா, கோம்பை; A. சுருளியாண்டி, கோம்பை; A. கனகசபைப்பிள்ளை, களுத்துறை; S. மங்கையர்க்கரசி அம்மாள், நயினார் தீவு; T. வரதராஜன், பறங்கிமலை; U. R. சாரங்கபாணி, U. N. அழகர்சாமி நாயுடு; U. V. இராஜலக்ஷ்மி அம்மாள், S. M. எசோதையம்மாள், S. கஸ்தூரிரங்கம், K. ஸ்ரீநிவாசன், இராஜாமணி ஜோஸப், U. S. நாராயண ஐயர், உடுமலைப்பேட்டை; V. மீனாக்ஷி சுந்தரம் ஐயர், பேரையூர்.

பரிசு பெற்றவர் :—U. N. அழகர்சாமி நாயுடு—உடுமலைப்பேட்டை.

ஆறு சொல்லூடாட்டங்களுக்குத் தொடர்ச்சியாக நேரிய விடை அனுப்பிவந்தவர்—

(1) திருமலை ஜக்கையாக, கோம்பை; (2) A. கனகசபைப்பிள்ளை; களுத்துறை. இவர்களில் பரிசு பெற்றவர்:—

A. கனகசபைப்பிள்ளை, களுத்துறை.

கலாநிலயம் 1930-வது வருடம் 3-வது வால்யூம்.

தலையங்கங்கள்:—அறியாமை வேண்டப்படும் 4. சுயநலச்சோதனை 8. விஷயத்திற்கேற்ற விளம்பரம். முயலுக்கு முயலவேண்டா. விளம்பினுல் வெட்கக்கேடு. கல்லாதபேர்களே நல்லவர்கள் 3. நாணத்தால் நைவார்திறம். வாலின் நீளம். பெருமையின் பெருமை...முதலிய கட்டுரைகள் ஐம்பது. உலகியலோடு வாழ்க்கையின் தத்துவத்தை விளக்குவன

கம்பராமாயணம்:—(T. N. சேஷாசலம் ஐயர், B. A. B. L.) அயோத்தியா காண்டம் முதலிரண்டு படலங்களின் விளக்க ஆராய்ச்சி அரசியலுக்குரிய அறங்களில் திருவள்ளுவர் வேதவியாசர் முதலானோர்க்கும் கம்பருக்கும் உள்ள வேறுபாடு 25-கட்டுரைகளில விளக்கப்பட்டுளது. ஸ்ரீமான் சோமசுந்தர பாரதியார் வரைந்துள, "தசரதன் குறையும் கைகேசி நிறையும்" என்னும் நூலிற்கூறிய பொருளும் முடிவும் கம்பருடைய கருத்திற் கொவ்வாதன வென்று 25-கட்டுரைகளில் வாதிக்கப்பட்டிருக்கின்றது.

குறுந்தொகை:—(K. இராமரத்நம் ஐயர், B. A.) புத்தகமாய் இப்பொழுது கிடைக்காத இச்சங்கநூற் செய்யுள் நானூறும் விளக்கமான உரையுடன் பதிப்பிக்கப் பெற்றிருக்கின்றது.

அப்பர்:—(E N தணிகாசல முதலியார், B. A. B. L.) அப்பர் அறுபத்துநான்கு கலைகளையறிந்து கையாண்ட பெருமை விளக்கப்பெற்றிருக்கின்றது.

இலஞ்சிப்பாவை:—(T. S. நடராஜபிள்ளை, B. A. B. L.) Sir Walter Scott என்பவர் ஆங்கிலத்தில் பாடிய Lady of the Lake என்னும் காவியத்தைத் தழுவி எழுதிய கதை.

மானத சாத்திரம்:—(T. P. மீனாக்ஷிசுந்தரம் M. A., B. L.) ஆங்கிலமுறையைத் தழுவி, நடத்தை, உணவு நாட்டம், அழுகை, சிரிப்பு, தன்னெடுப்பு, தன்னொடுக்கம், புணர்சசி, இணைவிழைச்சி, விளையாட்டு முதலியவைகளின் தத்துவங்கள் விளக்கப்பட்டுள்ளன.

தமிழ்ப் பாடம்:—வில்லிபாரதம் கிருஷ்ணன் தூதுச் சருக்கமும், அஷ்டப்பிரபந்தமும் போதிப்பதுடன், புணரிலக்கணம் முழுவதும் தெற்றென விளக்கப்பெற்றிருக்கின்றது.

நம்மாழ்வார் வைபவம்:—(K. இராஜகோபாலா சாரியார், B. A. B. L.) விளக்கமான ஆராய்ச்சியுடன், 2-ம்பத்து 6-ம் தசகம் வரையினும்.

இவைகளைத் தவிர, ஆங்கிலத்திலிருந்து மொழிபெயர்த்த கட்டுரைகளும், ஆச்சரிய சூடாமணி என்னும் வடமொழி நாடக மொழிபெயர்ப்பும், சிலப்பதிகாரக் கானல்வரியை அழகுற விளக்கிய 'மாதவி மாதவம்' என்னும் கட்டுரைகளும், தனிப்பாடல்களும், அண்டபுராண ஹாஸ்யப் பாடல்களும்,நாயன்மார் சரித்திர உண்மைபோன்றபல கட்டுரைகளும் நிறைந்துள.

1931-வது வருடம் 4-வது வால்யூம்.

தலையங்கம்:—அகமே புறம், வாழ்வாங்கு வாழ்பவர் 10. உண்மையில் உழல்வார் திறம் 5. மெய்ம்மையை அலமரச் செய்யலாமோ 4. அருமையினு மருமை 4 மறப்பது முறுதியாமே. நள்ளாள் நகை 4. முதலிய கட்டுரைகள் 50.

கம்பராமாயணம்:—(T. N. சேஷாசலம் ஐயர், B A. B. L.) கைகேசி சூழ்வினைப் படலம் முதல் அயோத்தியாகாண்டம் இறுதியாக 50 கட்டுரைகளில் ஆராயப்பெற்றிருக்கின்றது.

சூளாமணி:—(K. இராமரத்நம் ஐயர், B. A.) இதுகாறும் உரை யெழுதப்பெறாத இந்நூல், உரையுடன் பதிப்பிக்க ஆரம்பமாகி இவவாண்டில் ஐந்நூறு செய்யுள்கள் வந்துள.

யாப்பிலக்கணம்:—உறுப்பியலும், செய்யுளியலில் பாக்களின் இலக்கணமும்.

அப்பர்:—(E N தணிகாசல முதலியார், B A. B. L) அப்பர் 64 கலைகளைக் கையாண்ட பெருமை விரிவாக வரையப்பட்டிருக்கின்றது.

ஆண்டாள்:—(E. N. தணிகாசல முதலியார், B. A. B. L.) ஆண்டாள் பிறப்பு, இளமை, கல்வித்திறம், அனுபவம், யெளவனம், மதம், சித்தாந்தம், முத்தி முதலியவைகளின் உண்மை.

மானத சாத்திரம்:—(T. P. மீனாக்ஷிசுந்தரம், M. A. B. L.) புலன்களின் அமைப்பும், உணர்வு முதலியவைகளின் தத்துவமும் விளக்கப்பெற்றுள.

பிஸாரோ நாடகம்:—ஆங்கிலப்புலவர் R.B. Sheridan எழுதிய நாடகமொழிபெயர்ப்பு.

நவராத்திரி நாடகம்:—(K. N. சுந்தரேசன், B. A. Hons) ஓர் நவீன நாடகம்.

சிதம்பரதேவர் சரிதம்:—(Dr. V. S. அருணாசலம் பிள்ளை) முத்தியில் மனம் வைத்து உலகத்தில் விவகரிப்பார் பெருமையை உட்கொண்ட வோர் நாவல்.

களவியற் காரிகை:—(S வையாபுரிப்பிள்ளை, B. A. B. L.) இதுகாறும் அச்சேறாத நூல். அகப்பொருளிலக்கணத்தின் சிறப்பை விளக்கவல்லது.

கந்தபுராணமும் சங்க நூல்களும்:—(பண்டிதர், திம்மப்பா ஐயர்) கந்தபுராணத்தைச் சங்கநூல்களோடு ஒப்புநோக்கி ஆராயும் கட்டுரைகள்.

இவை தவிர, மொழிபெயர்ப்புக் கட்டுரைகள், தமிழிரட்டையர், முதலிய கட்டுரைகள் பல.

ஒவ்வொரு வால்யூமிற்கும் விலை வருமாறு:— பைண்ட் செய்யாதது ரூ. 7 8 0

காலிகோ கில்ட் பைண்ட் ரூ. 8 8 0 ஆப்லெதர் கில்ட் பைண்ட் ரூ. 9 0 0

இவ்விலையில் தபால் அல்லது இரயில் சார்ஜ் அடங்கவில்லை. இந்தியாவில் உள்ளவர்கள் இரயில்வே பார்ஸல் மூலமாகப் பெற்றுக்கொள்ளலாம். To Pay போட்டு அனுப்புவோம். ஏழெட்டெணுக்களுக்கு மேல் இரயில்வே கட்டணம் ஆகாது. பர்மா, இலங்கை இவ்விரண்டு இடங்களுக்கும் ரயிலில் அனுப்பமுடியாதாகையால் விலையுடன் தபால் பார்ஸல் சார்ஜ் ரூ. 2—4—0 சேர்த்தனுப்பவேண்டும். மலேயே, தென்னாப்ரிக்கா முதலிய நாடுகளில் இருப்பவர் தபால் சார்ஜிக்கு ரூ 3. சேர்த்தனுப்பவேண்டும். இவைகளை வி. பி. யில் அனுப்ப இயலாது. முன்பணம் அனுப்பி எழுதல் வேண்டும்.

எமது புதிய பிரசுரங்கள்

சோவியத் ருஷியா.

இது பண்டிதர் ஜ்வஹரிலால் அவர்கள் எழுதிய ஆங்கில நூலின் தமிழ்மொழி பெயர்ப்பு. ஏழை, பணக்காரன், ஆள்பவன், ஆளப்படுபவன், ஆண் பெண் என்னும் ஏற்றத்தாழ் வில்லாதபடி, குடிவாழ்க்கை ருஷியாவில் அமைக்கப்பெற்றுளதெனக் கூறப்படும் தற்கால ருஷியசரித்திரமாகும் இது. விலை ரூ. 1-4-0. தபால் செலவு வேறு.

இராட்டூர் வீரன் துர்க்காதாஸ்.

வங்காளக் கவி பாபு துவிஜேந்திரலால் எழுதிய நாடகத்தின் தமிழ் மொழிபெயர்ப்பு. இராஜபுத்திரர் வீரத்தையும், அவர்களது இராஜ விசுவாசத்தையும் இந் நாடகம் புலனுக்குகின்றது. விலை ரூ. 1-4-0. தபால் செலவு வேறு.

சுப்பிரமணிய பாரதியார்.

தமிழ் நாட்டின் தேசியக் கவி என்று கொண்டாடப் பெறும் ஸ்ரீமான் பாரதியாரின் நூல் ஆராய்ச்சியாகும் இது. விலை ரூ. 1-0-0. தபால் செலவு வேறு.

கிடைக்குமிடம்:—

பாரதி புத்தகாலயம்,
உத்தமபாளையம், மதுரை ஜில்லா.

திரு அருட்பா

பி. எ., எம். எல்., அட்வொகேட்,

ஆ. பாலகிருஷ்ண பிள்ளை பதிப்பு

ஒன்றே

சுவாமிகள் கை எழுத்தைக்கொண்டு அச்சிட்டது!

ஆகையால், பிழை முதலிய விபரீதங்கள் இல்லாததும் நூதன விஷயங்கள் எல்லாம் கொண்டதும் இப்பதிப்பே!!

ஏற்ற பெற்றி பாகுபாடு செய்யப்பட்டு, அரிய ஆராய்ச்சிக் குறிப்புக்களோடு விளங்கும் இப் பதிப்பின் பகுதிகள் அடக்க விலையில் கிடைக்கும்!!!

6-வது தனிப் பாசுரப் பகுதி

(பல மத ஸ்தோத்திரங்கள்-தபால் செலவோடு 6 அணு அனுப்புதல் வேண்டும்.)

ANCIENT JAFFNA

Mudaliar C. Rasanayagam C. C. S.

An anthentic history of Jaffna based on archeological, Epigraphic and Linguistic researches.

Rs. 5 8 0 Postage extra.

KALANILAYAM

Vellala Street, Purasawalkam, Madras.

சென்னைத் தமிழ் லெக்ஸிகன் பதிப்பாசிரியர் திருவாளர் S. வையாபுரிப் பிள்ளையவர்களால்

— பதிப்பிக்கப்பெற்ற நூல்கள் —

தமிழகராதி ஆதார நூற்றொகுதி
நாம தீப நிகண்டு.

நிகண்டுகளின் வரலாறு, ஆசிரியரது காலம், நூலின் நயங்கள், முதலியன அடங்கிய சிறந்த முன்னுரை கொண்டது. பொருட் பெயர்களை விளங்கக் கூறும் செவ்விய உரைபாடமுள்ளது. நூலின்கண் வந்துள்ள பொருட்பெயர்களனைத்தையும் முற்ற வுணர்த்தும் அனுபந்தம் பெற்றது. சுமார் 12000 சொற்கள் கொண்ட சிற்றகராதியாக உதவுந் தகையது.

விலை ரூபா **2-0-0**

அரும்பொருள் விளக்க நிகண்டு.

சிறந்த ஒரு சொற் பல்பொருள் நிகண்டு. நிகண்டுகளின் வரலாற்றினை விளக்கும் விரிந்த முன்னுரையுடன் கூடியது. சொல்லின் பொருள்களை யெளிதாகத் தெரிந்துகொள்ளுதற்குப் பலபொருளொருசொல் லகராதி சேர்க்கப்பட்டுள்ளது. விலை ரூபா **1-4-0**

கம்பராமாயணம்—உயுத்தகாண்டம்.

முதல் மூன்று படலங்கள்: பல எட்டுப் பிரதிகளை ஒப்புநோக்கித் திருத்தியது; பாடபேதங்களனைத்துங் கொடுக்கப் பெற்றது. விலை ரூபா **0-6-0**

திருக்குறள்

மூலமும் சொற்குறிப் பகராதியும் விஷய ஒப்புக்குறளும்

(வா. மார்க்க சகாயம் செட்டியார் பதிப்பு)

சிற்றடக்கமான இப்பதிப்பில் அட்டவணைக்கு மாத்திரம் 300 பக்கங்கள் அளிக்கப்பட்டிருக்கின்றன. திருக் குறளைப் படித்து ஆராய விரும்புவார்க்கு இவ்வட்டவணை மிகவும் உபயோகமானதாகும். ஒப்புக்குறள்களைச் சேர்த்துப் பதிப்பாசிரியர் அளித்துளது மாணுக்கருக்குப் பெரிதும் பயன்தரும். இப்பதிப்பின் அருமை பயின்று பார்த்தாலன்றிச் சொல்லிக்காட்டுவது சுலபமன்று. விலை அணு **0-12-0**

களவியற் காரிகை.

ஒரு சிறந்த அகப்பொரு ளிலக்கண நூல்; முதன் முறை இப்போதுதான் அச்சில் வெளிவந்தது. கிடைத்தற்கரிய பல அரிய நூல்களிலிருந்து எடுக்கப்பெற்ற மேற்கோள்களை யுடையது; பல அனுபந்தங்களையுடையது தமிழாராய்ச்சியாளர்க்குப் பெரிதும்பயன்படுவது. க்ரௌன் அளவில் 170 பக்கங் கொண்டது. சொற்பப் பிரதிகளே யுள்ளன. விலை ரூபா **3-0-0**

நூற்பொருட் குறிப்பு.

1. இறையனர் களவியலுரை; 2. குறுந்தொகை; 3. திருக்கோவையார்; 4. நற்றிணை; 5. களவழி நாற்பது; 6. தேவாரம்; 7. வீரசோழியம்; 8. நாலாயிர திவ்யப் பிரபந்தம் முதலிய எட்டு நூல்களின் பொருட் குறிப்பு அடங்கியது. தமிழ் லெக்ஸிகன் ஆபீஸ் தலைமைப் பண்டிதர் ஸ்ரீமான் மு. இராகவையங்காரவர்களால் தொகுக்கப்பட்டது. டெம்மியளவில் 175-பக்கங்கள் உடையது. இலக்கிய ஆராய்ச்சிக்கும் சரித்திர ஆராய்ச்சிக்கும் மிகஇன்றியமையாதது. சொற்பப் பிரதிகளே யுள்ளன. விலை ரூபா **10-0-0**

இராஜசுந்தரம்.

ஒரு நவீனகம். இனிய எளிய நடையில் எழுதப் பெற்றது. விலை ரூபா **0-8-0**

தினகரமாலை யென்னும்-தினகர வெண்பா

திருக்குறளின் அதிகாரத்திற் கொரு வெண்பாவாக 133 வெண்பாக்களைக் கொண்டது. இது ஒரு பண்டை நூல். இதைப் பதிப்பித்தவர் ஸ்ரீமான் S. வையாபுரி பிள்ளை, B.A., B.L., விலை அணு **0-6-0**

கலா நிலயம் ஆபீஸ், வேளாளர் தெரு, புரசை, சென்னை.

வர்த்தமானம்

பர்மாப் பிரிவினை விஷயம்:—சென்ற சில ஆண்டுகளாகப் பர்மாவை இந்தியாவினின்றும் பிரித்துவிட வேண்டும் என்னும் ஓர் இயக்கம் இருந்து வருகின்றது. பர்மியரில் சிலர் இந்தியாவுடன் பர்மா தொடர்புடையதாகவே யிருக்கவேண்டும் என்று அபிப்பிராயப்படுகின்றனர். சிலர் பிரித்துவிட வேண்டுமென்று கிளர்ச்சி செய்கின்றனர். இருகட்சியினர் கிளர்ச்சியும் பர்மாவில் வளர்ந்து வருகின்றதென்று தெரிகின்றது. பர்மாவை இந்தியாவினின்று பிரிக்கக்கூடாதென்னும் கட்சியைச் சேர்ந்தவரான டாக்டர் பாமா என்னும் பர்மியத் தலைவர் சமீபத்தில் இந்தியா மந்திரிக்கு அனுப்பியசெய்தி வருமாறு:—பர்மாச் சட்டசபையிலுள்ள அங்கத்தினர்களில் 44 பேர் பர்மா இந்தியத் தொடர்புட னிருக்கவேண்டும் என்று தீர்மானம் செய்திருக்கின்றனர். பிரிவினை வேண்டுமென்பவர் பல மகாநாடுகளைக் கூட்டுகின்றனர். சட்டசபையில் உள்ள பொறுப்புள்ள பிரதிநிதிகளில் அதிகமானவர் பிரிவினைக்கு விரோதமாயிருப்பதால், பிரிட்டிஷ் அரசாங்கத்தார் இப் பொறுப்புள்ள பிரதிநிதிகளின் அபிப்பிராயத்தை மதித்துப் பர்மாவும் இந்தியாவும் தொடர்புடையதாய் இருக்கும்படியான திருத்தத்தைச் செய்யவேண்டும். இந்தியா பர்மாவின் முன்னேற்றத்திற்கு அதிகம் உதவியிருக்கின்றது என்பதை எந்தப் பர்மியனும் மறுக்கமுடியாது. பிரிவினைக் கட்சியினர் பொறுப்பற்ற சிறுபான்மைத் தொகையினரே யாவர். இந்தியத் திருத்த அமைப்பில் பிரிட்டிஷார் இவ்விஷயத்தை நன்கு ஆலோசித்து ஒரு முடிவு செய்யவேண்டும்.

***

ஆயுதப் பரிஹரணம்:—ஜெர்மனி அரசாங்க அயல் நாட்டு மந்திரி ஆயுதப் பரிஹரணத்தைப்பற்றி எழுதுவதாவது:—உலகத்திலே போரில்லாமையை உண்டாக்க ஆயுதப்பரிஹரணம் செய்யவேண்டுமென்று சென்ற சில வருஷங்களாக மேனாட்டில் முயற்சி நடந்து வருகின்றது. சமீபத்தில் நடந்த ஆயுதப் பரிஹரண மஹாநாட்டின் நடைமுறையை நோக்குங்கால், முடிவான ஏற்பாடு ஒன்றும் நடவாதென்றே தோன்றுகின்றது. இங்ஙிலையில் ஜெர்மனியும் தன்னைக் காத்துக்கொள்வதற்கான ஏற்பாட்டைச் செய்து கொள்ள நேரிடும். 15 மாதகாலமாக ஜினிவாவில் உலக அரசாங்கப் பிரதிநிதிகள் கூடி யோசித்ததன் பயனாக, ஒரு நாடும் ஆயுதப்பரிகரணம் செய்யவில்லை. அப்படியிருக்கையில் ஜெர்மனியில் மாத்திரம் ஆயுதம் குறைக்கப்படவேண்டுமென்று கூறுவது எப்படி ஜெர்மனியால் ஏற்றுக்கொள்ளப்படும். இன்னும் இங்கிலாந்து திருப்திகரமான வழியில் ஆயுதப் பரிஹரண ஏற்பாடு செய்யவில்லை. எனவே ஜெர்மனி ஆயுத சம்ரக்ஷணம் செய்துகொள்ளவேண்டுவது அவசியமன்றோ. இன்னும் இவ்விஷயத்தில் முடிவான ஏற்பாடு என்ன நடக்கின்றது என்பதை ஜெர்மனி கவனித்து அன்னதற்குரியபடி தற்காப்பு வேலைகளைச் செய்துகொள்ளும்.

* * *

பிரமாண ரத்து:—அயர்லாந்து சட்ட சபையில் ராஜ விசுவாஸ பிரமாண ரத்துச் சட்டம் நிறைவேறிவிட்டது என்று அயல்நாட்டுச் செய்தி கூறுகின்றது.

***

சீன ஜப்பானிய யுத்தகம்:—சீன ஜப்பான் யுத்தம் இப்பொழுது பெக்கிங் என்னுமிடத்தில் நடந்து வருகின்றது. இவ்விரு நாட்டிற்கும் ஒரு ராஜி செய்ய சர்வதேசச் சங்கம் செய்த முயற்சி பயன்படவில்லை. பிரிட்டிஷாரும் அமெரிக்கரும் தற்காப்பிற்குரிய படையோடு இருக்கின்றனர். சீனர்களும் மிகவும் உக்ரமாகப் பெங்கிங் தேசத்தில் யுத்தம் செய்கின்றார்கள் என்று அயல்நாட்டுச் செய்தி கூறுகின்றது.

***

மாதர் நீதிக்கலி வெண்பா:—நற்றமிழ் அறிஞர், வி. பூதூர் கி. வேங்கடசாமி ரெட்டியார் அவர்களால் இயற்றப்பெற்ற இந்நூலைக் காண மகிழ்கின்றோம். மாதர்கள், தமது இல்லிலிருந்து, கணவன் முதல் மற்ற உற்றார் உறவினர்களுடன் எவ்வாறு கூடி வாழ்ந்து ஒழுகவேண்டும் என்பதை எடுத்துக்காட்டி, "அன்றிலிணை யென்னவுன தாணழக னோடென்றும் ஒன்றியிருப்பாய்" என முடிகின்றது இந்நூல். இதன் விலை $1\frac{1}{2}$ அணு. கிடைக்கும் இடம் அ. இராமானுஜம் பிள்ளை, விரகு டிப்போ, குமாரபுரி, வளவனூர் போஸ்ட், தென் ஆர்க்காடு ஜில்லா.

***

ரிக்வேதம்:—ரிக்வேதத்தைத் தமிழ்ச் செய்யுள்களாக மொழிபெயர்த்து உரையுடன் 64 பாகங்களில், மாதம் ஒருபாகம் வீதம், வெளியிடுதற்கு ஏற்றுக் கொண்டு, சென்னை இராயப்பேட்டையில் வசிக்கும், சிவத்யாநாநந்த மஹர்ஷி என்பவர் வெளியிட்டிருக்கும் முதல்பாகம் எம்பார்வைக்கு வந்திருக்கின்றது. 8 பாகத்திற்குச் சந்தா ரூ. 4. இதைப்பற்றிய விவரங்களை—சென்னை, இராயப்பேட்டை, முத்து முதலி தெரு, 27 நம்பர் வீட்டில் உள்ள, வேத ப்ரவாசன மந்திரிற்கு எழுதித் தெரிந்துகொள்ளலாம்.

ஆயுர்வேத வித்வான் B. V. பண்டிட் அவர்களின்

டானிக்குகள் :		தைலங்கள் :	
பாதாமி லேகியம்	ரூ. 3-0-0	சந்தனாதி 6 அவுன்ஸ்	ரூ. 1-0-0
ரதிவல்லப லேகியம்	2-0-0	அமிர்தாமலக ,,	0-12-0
மஹா திராக்ஷாதி லேகியம்	2-0-0	பிருங்காமலக ,,	0-12-0
குழந்தைகளுக்கு		ஸ்திரீகளுக்கு	
ஸ்ரீகா கஸ்தூரி மாத்திரை	0-4-0	ஸூதக டானிக்	2-0-0
பால சஞ்சீவினி	0-4-0	கர்ப்பாசய டானிக்	2-0-0
பால ஸுதா (டானிக்)	1-0-0	ப்ரஸவ லேகியம்	1-8-0

சுமார் 300 பேரலிகள் ஏமாற்றும். I.D.L. ச்யாவனப்ராசா I.D.L. பிருங்காமலக தைலம் கோரோஜனை மாத்திரை

"நஞ்சன்கூடு பல்பொடி"

சாதாரணம்-பாக்கெட் (ரிஜிஸ்தர் செய்துள்ளது) I.D.L. 61. மெடிகேடட்-டப்பி தயவுசெய்து கவனித்து வாங்கவும்.

I.D.L. ச்யாவனப்ராச சிறந்த டானிக் வைத்யசாலை - நஞ்சன்கூடு | காஸ்ட்ராலகஸ் | ஜவரோக்

[பஸ்பங்கள் வைத்தியர்களுக்கு மட்டும்.] [அட்வான்ஸுடன் ஆர்டர் செய்யவும்.]

KALANILAYAM
Reg. No. M. 2324.

— கம்ப ராமாயணம் —

பதவுரை விரிவுரை விளக்கம் இலக்கணக் குறிப்பு முதலியவைகளுடன்

வை. மு. சடகோப ராமாநுஜாசாரியார்
சே. கிருஷ்ணமாசாரியார்
வை. மு. கோபால கிருஷ்ணமாசாரியார்.

ஆசிரியர்களால் பதிப்பிக்கப் பெற்றவை.

பால காண்டம்	ரூ.	5	0	0
அயோத்தியா காண்டம்	,,	5	0	0
ஆரணிய காண்டம்	,,	4	0	0
கிட்கிந்தா காண்டம்	,,	4	8	0
சுந்தர காண்டம்	,,	5	0	0
யுத்த காண்டம்—2 பாகம்	,,	10	0	0

தபால், அல்லது இரயில் பார்ஸல் கட்டணங்கள் வேறு. வேண்டுவோர், தாம் வேண்டும் புத்தகங்களுக்குரிய விலையில் பாதியாவது முன்பணம் அனுப்பி ஆர்டர் செய்யவேண்டும். மற்றதை வி. பி. மூலம் பெற்றுக்கொள்வோம்.

மானேஜர்:— கலா நிலயம், வேளாளர் வீதி, புரசை, சென்னை.

தேகபலம், ஞாபகசக்தி, உற்சாகம், ஊக்கம்,
சுக சம்பத்து இவைகளைக் கொடுப்பதில்
எங்கள் பிரசித்திபெற்ற

ஆதங்க நிக்ரஹ மாத்ரைகள்

பலவிருத்தி ஔஷதங்களுக்கெல்லாம் முன்னணியில் நிற்கின்றன. இலட்சக் கணக்கான ஜனங்கள் (சென்ற 53 வருஷங்களாக) உபயோகித்து குணமென்னும் பாக்கியத்தை அடைந்திருக்கிறார்கள். நீங்களும ஒரு டப்பியை உபயோகித்துக் குணத்தை அறியுங்கள்.

32 மாத்திரைகளடங்கிய டப்பி 1-க்கு ரூ. 1 0 0
5 டப்பிகள் ரூ. 4 0 0

இனும்! ஆரோக்கிய கிரந்தம் இனும்!

ஆதங்க நிக்ரஹ ஔஷதாலயம்,
26, பிராட்வே, மதராஸ்.

ஆறெழுத்தந்தாதி:—அகத்திய முனிவர் அருளிச்செய்த இவ் வாறெழுத்தந்தாதி முருகக் கடவுளை முழுமுதற் கடவுளாக உபாசனை செய்வதற்குரியதாய் ஷடாக்ஷர மந்திரத்தின் வைபவத்தைத் தன்னுள் அடக்கியதென்று கருதப்படுகின்ற 100 செய்யுள்களைக் கொண்ட நூல். இது டாக்டர் V. S. அருணசலம் பிள்ளை யவர்களின் உரையோடு பதிப்பிக்கப் பெற்றது. விலை அணு 12. தபால் செலவு வேறு.

பெருமாள் திருமொழி:—(குலசேகராழ்வார் திருவாய் மலர்ந்தது.) ஸ்ரீமான் பு. ப. இரத்தின சபாபதி நாயகர் அவர்கள் இயற்றிய பதவுரை, இலக்கணக் குறிப்பு சரித்திர ஆராய்ச்சி முதலியவைகளுடன் சேர்ந்தது. நாலாயிரப் பிரபந்தம் பயில விரும்புவோர்க்கு இது மிகுந்த உதவி தரும். விலை:-கலிகோ 1-4-0, சாதா 1-0-0. தபால் செலவு வேறு.

கலாநிலயம்
வேளாளர் தெரு, புரசைபாக்கம், சென்னை.

NATIONAL INSURANCE COMPANY, LIMITED.

Head Office:
NATIONAL INSURANCE BUILDING,
7, Council House Street, Calcutta.

New Business Completed
During 1932 ... ... Rs. 1,55,66,720
Out of a business of ... Rs. 1,96,70,000
received in proposals.

Life Assurance is security { for the policyholder from an investment point of view. / for the policyholder and after him for his wife and children.

Claims paid over ... Rs. 1,00,00,000
Total Assets exceed ... Rs. 1,90,00,000

For Terms & Conditions apply to:—

T. ANANTACHARI, Branch Secretary, 113, Armenian Street, Madras. OR R. G. DAS & Co., Managers.

FIRE & ACCIDENT RISKS
covered by
NATIONAL FIRE AND GENERAL INSURANCE COMPANY Ltd.,
NATIONAL INSURANCE BUILDING,
7, Council House Street, Calcutta.

For Terms & Conditions apply to:—

T. ANANTACHARI, Branch Secretary, 113, Armenian Street, Madras. OR R. G. DAS & Co., Managers.

Printed at the B. N. Press, Mount Road and Published by Mr. E. Kumarish, B.A., B.L., (Editor)